# ஜீவகாருண்ணிய விளக்கம்.

(கூழிபிறைச் சிவனடியார் திருக்கூட்டம்.)

## ஆடு, கோழிகளின் புலம்பல்.

எங்களைக் கொன்று அருந்துகின்ற பெரியோர்களே! எங்கள் புலம்பல் உங்கள் காதுகளுக்கு எட்டவில்லையா? பெண்டு பிள்ளைகளோடு நீங்கள் பிறந்ததில்லையா? உங்கள் உற்றார் உறவினர்களில் யாரேனும் இறந்துவிட்டால், கதறிக்கதறி அழுது துடித்து விடுகிறீர்களே! மயானம் வரையிலும் பெருந்துயரெடுத்து அழுது அலறுகின்றீர்களே!! எங்களுக்கும் பெண்டு பிள்ளைகள் இனத்தார்கள் உண்டல்லவா? உங்களைப்போல் பேசமாட்டாத ஒரு வித்தியாசம் மாத்திரம் எங்களுக்குண்டு. எங்களை மாத்திரம் கழுத்தை அறுத்துப் பக்குவமாய்ச் சமைத்து உண் கலத்தில் வைத்து உண்ணலாமா? இது நீதியாகுமா?

கொலை களவு செய்வாரோடிணங்க வேண்டாம் என்று சிறுவயதில் படித்ததனை மறந்துவிட்டீர்களா? நோன்பென்பது கொன்று தின்னாமை என்றும், புலையும் கொலையும் களவும் தவிர் என்றும், பால்மணம் மாறாக்குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடங்களில் சொல்லித்தருவதைக்கூடக் கேட்டதில்லையா? ஈ, எறும்பு, பாச்சை முதலிய உயிர்கள் நீங்கள் உண்ணும் சோற்றிலோ, அல்லது நெய், தயிர், முதலியவற்றிலோ செத்துக்கிடக்கப் பார்த்துவிட்டால் அதன்பிறகு ஒருபிடி அன்னங்கூட உண்ணுவதற்கு உங்கள் மனம் ஒப்புவதில்லையே. எங்களை மாத்திரம் தின்னலாமா? எங்களைக் கொல்லுவதற்குக் காடு, மேடு, கண்மாய் கரைகளிலெல்லாம், சுவாமிகளை உண்டாக்கிவிட்டீர்களே! பக்கத்துணைக்குப் பூசாரிகளையும், கோடாங்கிகளையும் சாட்சிக்கு வைத்திருக்கிறீர்களே! நாங்கள் உங்கள் சுவாமிகளை நன்றாய்க் கேட்டுவிட்டோம். சுவாமிகளுக்கு எலும்புகூடத் தருவதில்லையாமே! எல்லாவற்றையும் நீங்களே நன்றாய் ஏப்பமிட்டு விடுகிறீர்களாம்! வீணாக "என் சன்னிதானத்தில் இரத்த நாற்றத்தையும், மயிர்க்கருக்கலையும் உண்டாக்கி என்னையும் கொலைகாரச் சுவாமி என்று உலகத்தார்கள் சிரிக்கும் வண்ணம் புலால் உண்ணும் பக்தர்கள் செய்துவிட்டார்கள். இது எனக்கு முற்றிலும் பிடிக்கவில்லை" என்று உங்கள் கருப்பன், மாரிகளெல்லாம் சொல்லுகிறார்கள். கசாப்புக்கடைக்காரர்களையும் கண்டு கேட்டுவிட்டோம். 'தின்கிறவர்கள் இல்லாவிட்டால் நாங்களும் உங்களைக் கொல்லுவதில்லை' என்று சொல்லுகிறார்கள்.

ஆகவே புலால் உண்ணும் பாரத நாட்டு வீரர்களே! மாரி, காளிகளை மண்டியிட்டு வணங்கும் பெரியோர்களே! உருசிதரும் காய், கனிகளையும் தானிய உணவுகளையும் உண்டு மகிழ்ந்திருக்கலாகாதா? பன்னீர், தண்ணீர், மாவிளக்கு, நெய் விளக்கு, தேங்காய், பழம், குடம், சாம்பிராணி ஆகிய இவைகளால் உங்கள் காட்டுத்தெய்வங்களை வணங்கி அருள் பெற்று வாழ்தலாகாதா? எங்களைப் பிணமாக்காதீர்கள். கால்வேறு, தலைவேறு, குடல்வேறாக அறுத்துத் துள்ளத்துடிக்க, இரத்தம் பீரிட்டடிக்கும்படி கொல்லாதீர்கள். எங்கள் நாற்றப் புலாலை உண்ணாதீர்கள். உங்கள் குழந்தைகளுக்கு ஊட்டவே ஊட்டாதீர்கள். ஏழைகளாகிய எங்கள் புலம்பலைக் கேளுங்கள். மீன், வாத்து, புறா, கதுவாலி முதலியவைகள் எங்களைப்போல் வழக்கும் பிராணிகளல்ல. புலி, கரடி, நரி முதலிய கொடிய மிருகங்களுக்குத் தப்பி வாழ்கின்றோம். அடைக்கலமென்று அண்டிப் பிழைக்கும் எங்களைக் கொல்லாதீர்கள். எங்களால் நீங்கள் அடையும் நன்மைகளை எண்ணிப்பாருங்கள்.

## உயிர்களைக் கொல்லாதீர்கள் ஊனை உண்ணாதீர்கள்.

வண்டமிழ் நாட்டுமக்களே! "தன்னுயிர் நீப்பினும் செய்யற்க, தான் பிறிதின்னுயிர் நீக்கும் வினை" என்பதை நினையுங்கள். பாவமூட்டையைச் சுமக்காதீர்கள். "தூங்கிவினை செய்" என்றபடி நீங்கள் செய்கின்ற எச்செயலையும் சற்று எண்ணிப்பாருங்கள். "மனம்போனபோக்கெல்லாம் போக வேண்டாம்". மனம் குரங்குக் குணமுடையது. இந்த மனக்குரங்கை அடக்குங்கள். உங்களை யாரேனும் பிடித்துக் கொன்றால் உங்கள் உறவினர்கள் பேசாதிருப்பார்களா? கொன்றவனைக் கொலைகாரனென்று சொல்லுகிறார்களே!

எந்த உயிரைக்கொன்றாலும், கொலைதான் என்பதை அறிவுள்ள மக்களாகிய நாம் உணருதல் வேண்டாமா? கேட்டால் சுவாமிக்காகக் கொல்லுகிறோம் என்று சொல்லலாமா? முழுப்பூசணிக்காயை இலைச்சோற்றில் மறைக்க முடிந்த பாடா? சுவாமி உங்களை நேரில் வந்து கேட்டு ஓலமிடுகின்றதா? என் கேட்டலறுகின்றதா? வயிறு பசிக்கிறதென்றா? அப்படியானால் தன் வயிற்றுப் பசியைத்தீர்த்துக் கொள்ள வழிதெரியாத சுவாமி உங்களை எப்படிக் காப்பாற்றும்? இதை நினைக்கும்பொழுது, யாரோ ஒருவன் அம்மா பழையது போடுங்கள்; பசியாத வரந்தருகிறேன் என்றதைப் போலதான் கொலை கேட்கிற்கும் சுவாமிகளின் சக்திகளையும் நினைக்கவேண்டியதாகிறது. மேலும் சிரிப்பும் வருகின்றது.

நிதானியுங்கள். உங்கள் நம்பிக்கையை நாங்கள் கேலிசெய்யவில்லை. சுவாமிகளைக் கும்பிட வேண்டாமென்று நாங்கள் சொல்லவுமில்லை. உலகத்தையும் சுவாமிகளையும் ஏமாற்றி ஏழை ஆடு, கோழிகளைக்கொன்று பக்குவமாய் ஆக்கி உண்டுவிட்டு, கோடாங்கி பூசாரிகளையும் பக்கபலமாய் வைத்துக்கொண்டு, கொலைப்பிரசாரமும் செய்கிறீர்களே! சாத்திரம், சமயம், வழக்கம் என்று சொல்லிக்கொண்டு செய்துவரும் சுயநல வேலைகளுக்கெல்லாம் விநாசகாலம் பிறந்துவிட்டது. கொலை, களவு, கள்ளுண்ணல், பொய்மொழிதல், காமம் என்னும் ஐந்தும் கொடியபாவங்கள் என்று நீதிநூல்கள் முறையிடுகின்றன.

மேலும் கற்றறிந்த பெரியோர்களெல்லாம், காய்கனிகளும், தானியங்களுமே சிறந்த அறிவையும், உடலுறுதியையும் தரத்தக்க உணவென்று சொல்லுகின்ற போதனையை நினையுங்கள். மேனாட்டினர்கள்கூட மரக்கறிச் சங்கம் என்று வைத்துக்கொண்டு, மதுமாமிசாதிகளை விலக்கி வருகிறார்கள். திருவள்ளுவர், தாயுமானவர், பட்டினத்தார் முதலிய ஒப்புயர்வில்லா பெரியார்கள் பிறந்த நாட்டினர்களாகிய நாம் உயிர்களைக் கொன்று ஊன் அருந்துதல் மிக மிக மானக்கேடான செயலாகும். "அழகல்லாதன செய்யேல்" என்று சொல்லியுள்ளதை மறவாதீர்கள். தாமசகுணந்தரும் மாமிசத்தை யுண்ணாதீர்கள். கருப்பணன், மாரியம்மனுக்கென்று தடித்தபொய்யைச் சொல்லாதீர்கள். மனித நீதிக்கு விரோதமான செயலை எந்நாளும் செய்யாதீர்கள்.

---

## என்ன செய்யப்போகிறீர்கள்?

அன்பர்களே!

வருகின்ற பங்குனிப் பொங்கலில் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? அன்பு நிறைந்த அம்பிகைக்கு ஆடு, கோழிகளையறுத்து அசுத்த ஆராதனை செய்யப்போகிறீர்களா? பாற்பொங்கலிட்டு சுத்த ஆராதனை செய்யப்போகிறீர்களா? எது உங்களுக்கு நியாயமெனத் தோன்றுகிறது? ஏழைப் பிராணிகளைக் கதறக்கதற கழுத்தறுப்பது நியாயமாகுமா? அவைகளும் நம்மைப்போல் உயிர்ப்பிராணிகளன்றோ? கொலைப் பாவத்திற்கு அஞ்சாது கழுத்தறுப்போமானால் அவ்வேழை உயிர்கள் பெரிதும் வருந்துமன்றோ? தாயைவிட்டுப் பிள்ளையையும் பிள்ளையைவிட்டுத்தாயையும் பிரித்துவிடுவோமானால் அவை மிகவும் துன்புறுமன்றோ? அவைகள் ஆறாக வடிக்கும் கண்ணீர் நம்மையும் நம்மக்களையும் பெரிதும் வாட்டுமன்றோ? ஆகவே, அன்பர்களே! அன்பே உருவாய் வந்த அம்பிகை பேரில் பழியைப்போட்டு ஆடு, கோழிகளை அறுக்காதீர்கள்! பாற்பொங்கலிட்டுப் பதினாறு பேறும் பெற்று இனிது வாழுங்கள். அன்பே சிவம்.

---

# வைத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

3-ம் பிரிவு-10 வது அத்தியாயம்.

### போயர் யுத்த காலத்தில் செய்த ஊழியம்.

மகாத்மா காந்தி நவஜீவன் பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் தமது ஜீவிய சரிதை பின்வருமாறு:—

1897-ம் வருஷம் முதல் 1899-ம் வருஷம் வரையில் நடந்துள்ள பல சம்பவங்களை விட்டு விட்டு போயர் யுத்தத்திற்கு வருகிறேன். இந்த யுத்தம் ஆரம்பமான காலத்தில் போயர்களிடம் எனக்கு அனுதாபமிருந்தது. ஆனால் இத்தகைய விஷயங்களில் என்னுடைய சொந்த அபிப்பிராயத்தை வற்புறுத்த எனக்கு உரிமை கிடையாதென்று அப்பொழுது நான் நினைத்தேன். இது சம்பந்தமாக என்னுடைய அந்தராத்மாவுடன் நான் நடத்த வேண்டியிருந்த பெரிய போராட்டத்தின் விவரத்தை தென்னாப்பிரிக்கா ஸத்யாக்ரஹ இயக்க சரிதையில் விஸ்தாரமாகச் சொல்லியிருப்பதால் மறுபடியும் அதை இங்கு எடுத்துரைக்க வேண்டியது அவசியமில்லை. இந்த விவரத்தை அறிய விரும்புவோர் அந்த சரிதையைப் படித்துப் பார்த்துக் கொள்ளலாம். பிரிட்டிஷ் ஆட்சியில் எனக்கிருந்த பக்தியினால் இந்த யுத்தத்தில் நான் பிரிட்டிஷாருடன் சேர்ந்துகொண்டேன். பிரிட்டிஷ் பிரஜைகளுக்குரிய உரிமையை நான் கேட்கையில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பாதுகாப்பிலும் நான் சம்பந்தப்படக் கடமைப்பட்டிருப்பதாக நான் நினைத்தேன். ஆகையால் சில நண்பர்களைச் சேகரித்துக்கொண்டு, மிகுந்த சிரமப்பட்டு எங்களை ஆம்புலன்ஸ் படையாக ஏற்றுக் கொள்ளும்படி செய்தேன். இந்தியர்கள் பயங்கொள்ளிகளென்றும், அபாயத்திற்கு அஞ்சுபவர்களென்றும், சொந்த நன்மையைத் தவிர வேறெதையும் கவனிக்க அவர்களுக்கு புத்தி எட்டுவதில்லையென்றும் ஆங்கிலேயர்கள் மனதில் ஒரு எண்ணம் இருந்து வந்தது. ஆகையால் என்னுடைய ஏற்பாடு பிரயோஜனப்படப் போவதில்லையென்று பல ஆங்கில நண்பர்கள் அதைரியப்படுத்தினார்கள். ஆயினும் டாக்டர் பூத் என்னுடைய அபிப்பிராயத்தை மனப்பூர்வமாக ஆதரித்தார். எங்களை ஆம்புலன்ஸ் வேலையில் அவர் பயிற்சிசெய்துவைத்தார். ஆம்புலன்ஸ் வேலைக்கு நாங்கள் அருகதையுடையவர்களென்று அத்தாட்சிப் பத்திரங்கள் வாங்கிக்கொண்டோம். மிஸ்டர் லாப்டனும், மிஸ்டர் எஸ்கோம்பும் என்னுடைய ஏற்பாட்டை மனப்பூர்வமாக ஆதரித்தனர். கடைசியாக யுத்தரங்கத்தில் ஊழியம் செய்ய நாங்கள் அனுமதிகோரினோம். கவர்ன்மெண்டார் நாங்கள் ஊழியம்செய்ய முன்வந்ததைப் பாராட்டுவதாகவும், இருந்தாலும் எங்களுடைய ஊழியம் அப்போது தேவையில்லையென்றும் சொல்லிவிட்டார்கள்.

நான் அதைக் கேட்டுக்கொண்டு திருப்தி அடைந்து விடவில்லை. டாக்டர் பூத்தை அழைத்துக்கொண்டு நேட்டால் பாதிரியாரைப் போய்ப்பார்த்தேன். எங்களுடைய ஆம்புலன்ஸ் படையில் பல இந்திய கிறிஸ்தவர்களும் இருந்தார்கள். பாதிரியார் என்னுடைய பிரேரணையை அங்கீகரித்து எங்களுடைய ஊழியத்தை ஏற்றுக் கொள்ளும்படி செய்வதாக வாக்களித்தார்.

காலமும் எங்களுக்கு அனுகூலமாகவிருந்தது. எதிர்பார்த்ததைவிட அதிக தைரியத்தையும், மன உறுதியையும், சாமர்த்தியத்தையும் போயர்கள் காட்டிக்கொண்டார்கள். எங்களுடைய ஊழியம் அவசியமாகிவிட்டது.

எங்களுடைய படையில் 1100 பேர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு 40 தலைவர்கள் இருந்தார்கள். அவர்களில் 300 பேர்கள் சுயேச்சையுடையவர்கள்; பாக்கிப்பேர்கள் ஒப்பந்தக் கூலிகள். டாக்டர் பூத்தும் எங்களுடனிருந்தார். எங்களுடைய படை நல்ல வேலை செய்தது. போர்முனைக்கு அப்பாலேயே நாங்கள் வேலை செய்ய வேண்டியவர்களாயினும், செஞ்சிலுவைச் சங்கத்தாருடைய பாதுகாப்பு எங்களுக்கு இருந்தபோதிலும், ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் யுத்த முனையின் இறுதியில் நாங்கள் இருந்துகொண்டு வேலைசெய்ய வேண்டி வந்துவிட்டது. எங்களை ஒதுக்கிவைக்கும்படி நாங்கள் முதலில் கேட்கவேயில்லை. துப்பாக்கிப் பிரயோகத்திற்கு நாங்கள் ஆளாவதை அதிகாரிகள் விரும்பவில்லை. ஸ்பியன் காப்பில் தாக்கப்பட்ட பிறகு நாங்கள் அபாயத்திற்கு ஆளாகக் கட்டுப்பட்டிராத போதிலும், அபாயத்தை லட்சியம் செய்யாமல் போர் முனையில் கீழே அடிபட்டு விழுகிறவர்களை வந்து எடுத்துக்கொண்டு போனால் உபகாரமாகவிருக்குமென்று ஜனரல் புல்லர் செய்தி அனுப்பினார். எங்களுக்கும் ஆட்சேபமே கிடையாது. ஸ்பியன்காப் சம்பவத்திற்குப் பிறகு நாங்கள் போர்முனையிலேயே இருக்க வேண்டியதாகிவிட்டது. அந்தக் காலத்தில் காயம் பட்டவர்களைத் தூக்கிக்கொண்டு தினமானம் 20, 25 மைல் தூரம்போக வேண்டியிருந்தது. அப்பொழுது தளகர்த்தர் வுட்கேட் போன்றவர்களையும் தூக்கிச் செல்லும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது.

ஆறுவார ஊழியத்திற்குப் பிறகு எங்களுடைய படையைக் கலைத்துவிட்டார்கள். ஸ்பியன் காப்பிலும் வால்கிரான்ஸிலும் திருப்பி யடிக்கப்பட்ட பிறகு லேடிஸ்மித்தையும், இதர இடங்களையும் சாமான்யமாகப் பிடித்துக்கொண்டு விடலாமென்ற எண்ணத்தை பிரிட்டிஷ் தளகர்த்தர் விட்டுவிட்டு இங்கிலாந்திலிருந்தும் இந்தியாவிலிருந்தும் துருப்புகள் வரும் வரையில் சிறிது மெதுவாகச் செல்லுவதென்று தீர்மானித்துக் கொண்டுவிட்டார்.

அந்தக்காலத்தில் நாங்கள் செய்த ஊழியத்தை எல்லோரும் பாராட்டினார்கள். இந்தியர்களுடைய பெருமையும் உயர்ந்தது. "நாம் எல்லோரும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிள்ளைகள்" என்று பத்திரிகைகள் துதிபாட ஆரம்பித்தன.

தளகர்த்தா புல்லர் எங்களுடைய ஊழியத்தைச் சிலாகித்து எழுதினார். தலைவர்களுக்கு யுத்தப் பதக்கங்கள் கொடுக்கப்பட்டன.

இந்திய சமூகத்தினருக்குள் கட்டுப்பாடு அதிகம் ஏற்பட்டது. ஒப்பந்தக் கூலிகளாக வந்திருந்த இந்தியர்களுடன் எனக்கு நெருங்கிய சம்பந்தம் ஏற்பட்டது. அவர்களுக்கு விழிப்பு ஏற்பட்டது. எல்லா ஜாதியினருடைய மனதிலும் தாங்கள் இந்தியர்கள் என்ற உணர்ச்சி ஏற்பட்டது. இந்தியர்களுடைய குறைகள் இப்பொழுதாவது நிவர்த்தியாகி விடுமென்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். அப்பொழுது வெள்ளைக்காரர்களுடைய மனோபாவமும் மாறுதலடைந்ததாகக் காணப்பட்டது. யுத்தகாலத்தில் வெள்ளைக் காரர்களுடன் அன்னியோன்னிய பாவம் இருந்துவந்தது. ஆயிரக்கணக்கான ஆங்கில துருப்புகளுடன் எங்களுக்குப் பழக்கமேற்பட்டது. அவர்கள் எங்களிடத்தில் சிநேகபாவத்தைக் காட்டினார்கள். அவர்களுக்கு ஊழியம் செய்ய நாங்கள் வந்திருந்ததை அவர்கள் பாராட்டினார்கள். சோதனைகாலத்தில் மனித சுபாவம் எவ்விதம் வெளிப்படுகிறதென்பதை ருஜூப்படுத்துவதற்காக அப்பொழுது நடந்தவமான சம்பவமொன்றை நான் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. லார்டு ராபர்ட்ஸின் புதல்வராகிய தளகர்த்தர் ராபர்ட்ஸுக்குப் படுகாயம் ஏற்பட்டிருந்த சிவ்லி முகாத்திற்கு நாங்கள் சென்றுகொண்டிருந்தோம். அவருடைய சரீரத்தை யுத்த முனையிலிருந்து தூக்கிக்கொண்டு போகும் பாக்கியம் எங்கள் படைக்குக் கிடைத்தது. அது வறட்சையான காலம்; எல்லோருக்கும் தாகம் அதிகமாகவிருந்தது. வழியில் ஒரு சிறிய நீரோடைகால் இருந்தது. ஆனால் முதலில்யார் தாகசாந்தி செய்துகொள்வது? வெள்ளைக்காரர்கள் தாகசாந்தி செய்துகொண்டபிறகு நாங்கள் தாகத்தைச் சமனம் செய்துகொள்ளுவதாகச் சொன்னோம். தாங்கள் முதலில் தாகசாந்தி செய்துகொள்ளப் போவதில்லையென்று அவர்கள் சொல்லி நாங்கள் தாகசாந்தி செய்துகொள்ளும்படி சொன்னார்கள். யாருக்கு முன் பாத்தியம் கொடுப்பதென்பதை முடிவு செய்வதில் சிறிதுநேரம் வேடிக்கையாகக் கழித்தோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## குலாபிமான உபந்நியாசம்.

### பால்ய நாடார் சங்கம், விருதுநகர்.

19—2—27 மாலை 7. 30 மணிக்கு ராவ்பகதூர் த. இரத்தினசாமிநாடார் ஞாபகச்சின்ன வாசகசாலையின் மேல் மாடியில் ஸ்ரீமான் தெ. ம. பு. சிதம்பர நாடார் அவர்களின் தலைமையின் கீழ் மேற்படி சங்கம் கூடியது. அவ்வமயம் நண்பர் ப. வே. ச. பழனிச்சாமி யென்பவர் "குலாபிமானம்" என்னும் விஷயத்தைக் குறித்து கீழ் கண்டவாறு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

குலாபிமானமென்பது குலம்—அபிமானமென இரு சொற்றொடராம். குலம் என்றால் ஜாதி யென்றும் அபிமானமென்றால் அன்பு, பற்று, ஆசை யெனவும் பொருள்படும். அதாவது பிறந்த ஜாதியாரின் மேல் அபிமானம் கொண்டிருத்தலாம். மானிடராகிய நமக்கு அபிமானம் முக்கியமானதே. அபிமானமில்லாதவன் மிருகத்தைவிடக்கீழாக மதிக்கப்படுகிறான். இன்னும் அபிமானமே அன்பு, இரக்கம், பரோபகாரம் முதலியவைகளைக் கொடுக்கிறதென்று கூசாமல்—நெஞ்சந்தளராமல் சொல்லாநிற்பேன். ஆதலின் அபிமானம் அதி அத்யாவசியமானதே. இஃதேயென் உள்ளக்கிடக்கை.

மானிடர்களைப் பிறிதோர் எல்லாவித மான சிருஷ்டிகளிடத்தும் அன்போடிருக்க வேண்டுமென்றும் முக்கியமாக தாய் தந்தை தெய்வம் குரு முதலியவர்களிடம் பக்தியைச் செலுத்தவேண்டுமென்றும் சாஸ்திரங்கள் சாற்றுகின்றன. 'குலத்தளவைப் பேணி நலத்தைக் காத்' என்ற மூதாட்டியின் வாக்கியப்படியும் குல சேவையே தெய்வீக பூஜையென்ற வாக்கின்படியும் முதலில் குல சேவையே செய்யவேண்டுமெனச் சொல்லாநிற்பேன்.

நம்மில் சிலர் குலாபிமானம் தேவையில்லையெனவும் தேசாபிமானிகளாய் நாம் விளங்கவேண்டுமெனவும் வீணே வாதஞ் செய்கின்றனர். அன்னவர் நாம் என்ன நிலையில் இருக்கின்றோம்; என்செய்கின்றோம்; நமக்கு எது அவசியம்; எனைச்செய்ய வேண்டுமென ஆராய்ந்து பார்ப்பாரேல் நாடார் மக்களுக்குத் தற்சமயம் குலாபிமானம் முக்கிய அவசியமென உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். அதனால் தேசாபிமானம் வேண்டாமென நான் சொல்லவரவில்லை; தற்சமயம் வேண்டற்பாலதல்லவெனச் சொல்வேன். நாம் தேசாபிமானிகளாக விளங்கவேண்டுமென்றால் கோபி நாயக்கன்பட்டி க்ஷத்திரிய நாடார் நடத்திவருகின்றபடி எல்லா ஜாதியாரையும் சமத்துவப்படுத்தி கல்வி தொழில் முதலியவைகளைப்போதித்து விருத்தியாப்பியாசம் செய்து வைப்போமாயின் நமமைவிட தேசாபிமானிகள் உலகத்தில் இல்லையெனபது திண்ணம். ஆகையால் குலாபிமானத்துடன் நாடார்களுக்கு உதவிசெய்து நமக்குக் கீழ் உள்ள மக்களையும் ஆதரித்து வந்தால் நமக்கு கடவுளிடத்தும் மகாத்துமா காந்தியிடத்தும் அபிமானம் மிகுமே யொழிய குறைவுபடாதென்பது திண்ணம்.

நம்மில் சிலர் அபிமானமின்மையால் நம்மால் ஒரு காரியமும் செய்ய முடியாதென்றும், தாய்ச்சங்கம் பார்த்துக்கொள்ளுமென்றும், நாம தாய்ச்சங்கப்பணி முதலியவர்களுக்கு அடிமையென்று சொல்லி பாரத்தைத் தாய்ச்சங்கத்தின் மீது சுமத்துகின்றார்கள். அந்தோ! நம்தாய்ச்சங்கம் பணமில்லாமல் என்னசெய்யும்? ஒன்றும் முடியாது. நாம் உண்மையான குலாபிமானிகளாய் இருந்தால் மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார்—கருமமே கண்ணாயினர் என்றபடி முயற்சியுடன் உழைத்து தலைக்கட்டுவரி வசூல் செய்தும் ஏழைமக்களுக்கு கல்விச்சாலை தொழிற்சாலை முதலியவைகள் ஏற்படுத்தி முன்னேற்றமடையச் செய்வோமாக. ஆனால் பெரிய நகரங்களில் பூரணமாக தலைக்கட்டுவரி வசூல் செய்யவில்லை யென்பதைக் கேள்விப்பட்டு மனம் வருந்தாமலிருக்க முடியவில்லை.

## நாடார் மகாஜன சங்கம், மதுரை.

### ஸ்பெஷல் ஜெனரல் மீட்டிங்கு தீர்மானங்கள்.

(காரியதரிசிகளிடமிருந்து.)

1927-ஹு பிப்ரவரி மீ 12உ மாலை 5 மணிக்கு மதுரை விக்டோரியா எட்வர்டு ஹாலில் நடைபெற்ற நாடார் மகாஜனசங்கம் ஸ்பெஷல் ஜெனரல் மீட்டிங்கின் நடவடிக்கைகள்.

1. சங்கம் வைஸ் பிரஸிடெண்ட் ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டியநாடார், எம். எல். ஸி அவர்கள் அசௌக்கியத்தின் பொருட்டு மீட்டிங்குக்கு வரக்கூடாமையால் சங்கம் மானேஜர் மதுரை வக்கீல் ஸ்ரீமான் எ. பொன்னையாநாடார் பி. ல். அவர்கள் அவைத்தலைவராகத் தெரிந்தெடுக்கப்பெற்றார்.

2. மீட்டிங்குக்கு 118 அங்கத்தினர்கள் ஆஜராகியிருந்தார்கள். ஸ்ரீமான் வே. அசிதம்பரநாடார் அவர்கள் கடவுள் வணக்கம் பாடியபின்னர் மீட்டிங்கு ஆரம்பமாயிற்று.

3. தூத்துக்குடி ஸ்ரீமான் மாரியப்ப நாடாரவர்கள் ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் நிதிக்கு நிதியின்போரால் லாட்டரி டிக்கட்கள் வாங்கவேண்டுமென்று கொடுத்த தந்திவாசிக்கப்பெற்றது. ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் லாட்டரியின் நடவடிக்கைகளையும் வரவு செலவு கணக்குகளையும் குறித்து காரியதரிசிகளால் சமர்ப்பிக்கப்பெற்ற ரிப்போர்ட் அங்கீகரிக்கப்பெற்றது. ஆங்காங்கு தலைவர்களும் அபிமானிகளும் சீட்டு விற்பனையில் ஒத்துழைத்ததின் மூலம் சங்கத்திற்குச் செய்த பேருதவியை நன்கு பாராட்டி காரியதரிசிகள் அன்னவர்களுக்குத் தங்களின் வந்தனத்தை சங்கத்தின் பேரால் தெரிவித்தனர். லாட்டரியிலிருந்து ஸ்காலர்ஷிப் நிதிக்கு நிகரவருமானம் ரூபாய் 39376—10—3 கிடைத்ததாக ரிப்போர்ட்டிலிருந்து வெளியாயிற்று.

4. லாட்டரியில் கிடைத்தவருமானத்தை மதுரை டவுணில் கட்டடங்கள் வாங்கி வாடகைக்கு விட்டு அதன் மூலம் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று மதுரை நாடார் ஊழியப்பிரசாசபை காரியதரிசிகளில் ஒருவரான ஸ்ரீமான் எஸ். கே. துரைச்சாமிநாடாரவர்களால் பிரேரிக்கப்பெற்று, விருதுநகர் ஸ்ரீமான் கே. பி. சங்கரலிங்கநாடாரவர்களால் ஆமோதிக்கப்பெற்று, திருமலாபுரம் ஸ்ரீமான் எஸ். ஆர். சுவாமிக்காளைநாடாரவர்களால் ஆதரிக்கப்பெற்றது.

மேற்படி லாட்டரித்தொகையில் ரூ 10000க்கு நாடார்பாங்கில் பங்கு எடுத்துக்கொண்டு மீதி ரூபாயில் மதுரை டவுணில் கட்டடங்கள் வாங்கவேண்டுமென்று அருப்புக்கோட்டை நாடார் குல மித்திரன் உப பத்திராதிபர் ஸ்ரீமான் சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியரவர்களால் ஒரு திருத்தப்பிரேரணை கொண்டு வரப்பெற்று நாடார் குல மித்திரன் ஆபீஸ் குமஸ்தா ஸ்ரீமான் ஜி. அருணாசலநாடாரவர்களால் ஆமோதிக்கப்பெற்றது.

மேற்படி லாட்டரி தொகையில் ரூ 10000-க்கு நாடார் பாங்கில் பங்கு எடுத்துக்கொண்டு மீதி ரூபாயை கவர்ன்மெண்ட் யுத்தக்கடன்பத்திரம் வாங்கவேண்டுமென்று மதுரை ஸ்ரீமான் மா. வே. பழனிச்சாமிநாடாரவர்களால் மற்றொரு திருத்தப்பிரேரணை கொண்டுவரப்பெற்று சின்னமனூர் ஸ்ரீமான் அ. மு. கு. விஜயரத்தினசாமிநாடார் அவர்களால் ஆமோதிக்கப்பெற்றது.

விஷயம் வெகு நேரம் நீர்க்க ஆலோசிக்கப்பெற்ற பின்னர் ஸ்ரீமான் மா. வே. பழனிச்சாமிநாடாரவர்களின் திருத்தப் பிரேரணையை அவைத்தலைவர் ஓட்டுக்குவிட்டார். 18 அங்கத்தினர்கள் மட்டும் மேற்படி திருத்தப்பிரேரணைக்கு சாதகமாக ஓட்டுக்கொடுத்தனர். ஏராளமான அங்கத்தினர்கள் அதற்கு விரோதமாக ஓட்டுக்கொடுத்ததினால் மேற்படி திருத்தப்பிரேரணை தோற்கடிக்கப்பட்டது. இரண்டாவதாக ஸ்ரீமான் சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியரவர்களின் திருத்தப் பிரேரணை ஓட்டுக்குவிடப்பெற்று அதற்கு சாதகமாக20 அங்கத்தினர்கள் மாத்திரம் ஓட்டுக்கொடுத்தனர். மெஜாரிட்டியாருடைய ஓட்டுகள் விரோதமாயிருந்தபடியால் மேற்படி திருத்தப்பிரேரணையும் தோற்றுப்போயிற்று. அப்பால் ஸ்ரீமான் எஸ். கே. துரைச்சாமிநாடாரவர்களால் கொண்டுவரப்பெற்ற பிரேரணை ஓட்டுக்கு விடப்பெற்றதில் 64 அங்கத்தினர்கள் சாதகமாகவும் 13 அங்கத்தினர்கள் பாதகமாகவும் ஓட்டுகொடுத்தார்கள். சிலர் நடுநிலைமை வகித்தார்கள். ஆகவே லாட்டரியில் கிடைத்த வருமானத்திற்கு மதுரை டவுணில் கட்டடங்கள் வாங்கி வாடகைக்கு விட்டு அதன் மூலம் விருத்தி செய்வதென்று தீர்மானிக்கலாயிற்று.

மேற்கண்ட தீர்மானங்களுக்கு முறையே பாதக சாதகமாக ஓட்டுக் கொடுத்தவர்களின் பெயர்களை பிரித்தெடுக்கும்படி தூத்துக்குடி ஸ்ரீமான் அரி. அ. சு. ஆறுமுகச்சுவாமிநாடாரவர்கள் அவைத்தலைவரைக் கேட்டுக்கொண்டனர். திருத்தப்பிரேரணைக்குச் சாதகமாக வெகு சிலரே ஓட்டுக்கொடுத்ததாலும் பிரதமப் பிரேரணை ஏராளமான அங்கத்தினர்களால் அங்கீகரிக்கப்பெற்ற தாகையாலும் ஓட்டுக்கொடுத்தவர்களின் பெயர்களை பிரித்தெழுதுவதில் பிரயோஜனமில்லையென்ற காரணத்தையிட்டும் சங்கம் சட்டதிட்டங்களில் அவ்விதம் ஓட்டர்களின் பெயர்களைப் பிரித்தெடுத்தெழுத யாதொரு நிபந்தனையுமில்லாதகாரணத்தைக்கொண்டும் ஸ்ரீமான் அரி. ஆ. சு. ஆறுமுகச்சுவாமிநாடாரவர்கள் வேண்டுகோளுக்கிணங்க முடியாதென்று அவைத்தலைவர் பதில் அளித்தனர்.

5. 1925–26 வருஷத்திற்கு ஸாங்ஷன் செய்யப்பெற்ற ஸ்காலர்ஷிப், ஸ்கூல் கிராண்டுகளில்; கொடுபடாமலிருக்கும் தொகைகள் ஸ்காலர்ஷிப் பண்டிலிருந்து கொடுக்கப்பட வேண்டுமென்று விருதுநகர் ஸ்ரீமான் கே. பி சங்கரலிங்கநாடாரவர்களால் பிரேரிக்கப்பெற்று திருமலாபுரம் ஸ்ரீமான் எஸ். ஆர். சுவாமிக்காளைநாடாரவர்களால் ஆமோதிக்கப்பெற்று சபையோரால் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பெற்றது.

6. 1927-28 வருஷத்திற்கு வேலைத்திட்டம் தயாரிக்கும் விஷயமாய் சிறிது நேரம் ஆலோசிக்கப்பெற்று கௌன்ஸிலே வேலைத்திட்டம் தயாரித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பெற்றது.

7. சென்னை சட்டசபைக்குக்குறைந்தது இரண்டு நாடார் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தை நமது சங்கத்திற்குக் கொடுக்கும்படி மாக்ஷிமை தங்கிய சென்னை கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பம் செய்யவேண்டுமென்றும் இவ்விஷயத்தில் வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளும்படி சட்டசபையில் நாடார்குலப் பிரதிநிதிகளாகவிருக்கும் கனவான்களை கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் ஸ்ரீமான் பி. திருமேனிநாதநாடாரவர்களால் பிரேரிக்கப்பெற்று ஸ்ரீமான் ப. ரா. முத்துச்சாமிநாடாரவர்களால் ஆமோதிக்கப்பெற்று ஒப்புக்கொள்ளப் பட்டது.

8. விஷய சூசிகையில்கண்ட இதர விஷயங்களை கௌன்ஸிலில் ஆலோசித்துக்கொள்ளும்படி வாபஸ் அனுப்பப்பெற்றது.

9. வந்தன உபசாரத்துடன் மீட்டிங்கு இரவு 9½-மணிக்கு முற்றுப் பெற்றது.

இனிபாலது பால்யர்களாகிய நாம் குலாபிமானத்துடன் தலைக்கட்டு வரி வசூல் செய்து கல்வி கைத்தொழில் முதலியவைகளை நம் ஏழைமக்களுக்குக் கொடுத்து முன்னேற்றமடையச் செய்ய ஒவ்வொருவரும் பாடுபட்டு கோபிநாயக்கன்பட்டி க்ஷத்திரிய நாடார்கள் போல ஆதித்திராவிட மக்கட்கும் கல்வி கொடுத்து முன்னேற்றத்திற்குக் கொண்டுவரப் பாடுபடுவோமாக.

தெ. சி. நா. ராமசாமி,
காரியதரிசி.

## ஸ்ரீமான் அரி அ சு துரைச்சாமி நாடாரவர்களுக்கு அக்கிராசனர் பதவி.

அருப்புக்கோட்டை ஸ்ரீமான் மு. மு. மு. அவர்களின் ஞாபகச்சின்ன வாசகசாலையில் நாளது மாசி மீ 5 உ கூடிய நிர்வாகக் கூட்டத்தில், இவ்வாசகசாலையின் 6-வது வருடப் பூர்த்தி விழாவை பங்குனி மாதம் 3-வது வாரத்தில் நடத்துகிறதென்றும், மேற்படி வைபவத்திற்கு தூத்துக்குடி பிரபல மாவர்த்தகரும், பாங்கருமான ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமி நாடாரவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி கேட்பதென்றும், ஒருக்கால் அவருக்கு அவகாசமில்லாவிட்டால் ஸ்ரீமான்களான தானியல் தாமஸ் நாடார், க. அ. மா. அ. காளியப்ப நாடார், கொழும்பு, கலியாணசுந்தர நாடார், நட்டாத்தி ஜமீன்தார் இவர்களில் ஒருவரை மேற்படி பதவிக்குத் தேர்ந்தெடுத்துக்கொள்வதென்றும் தீர்மானிக்கலாயிற்று என்று காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

## அருப்புக்கோட்டை ஸ்ரீமான் முதலாளி மு. மு. மு. வாசகசாலை.

இதனாதாவில் 16—2—27 ல் இரவு 10 மணிக்கு வாசகசாலை ஹாலில் தர்க்க சங்கமொன்று நடைபெற்றது. போடம்பட்டி ஸ்ரீமான் கருப்பையாபிள்ளை அவர்கள் தலைமை வகித்தார்.

"கிராம வாழ்க்கையே" மேன்மையானதென்று க. அருணாசலம் உபந்நியாசித்தார். இதை ஆதரித்து ஸ்ரீமான்களான "நாடார்குல மித்திரன்" பத்திராதிபர் சூ. ஆ. முத்து நாடார், சிவ. கு. சுப்பிரமணியன், அ. பெ. இரத்தினவேல்நாடார், பெ. வ. ஜெகநாதா ஆகியவர் பேசினார்கள். நகரவாழ்க்கையே நலமென ஸ்ரீமான் அ. கு. அண்ணாமலை நாடார் பேசினார். இதை ஆதரித்து ஸ்ரீமான்களான பெ. சந்திவீர நாடார், ஆ. இ. அண்ணாமலை நாடார் ஆகியவர்கள் பேசினார்கள்.

கடைசியாக அக்கிராசனர் நகர வாழ்க்கையை ஓர் கோபுரமாகவும், கிராம வாழ்க்கையை அதற்கு அஸ்திவாரமாகவும் உதாரணம் சொல்லி பல நீதிகளையும் எடுத்துக் கூறினார். காரியதரிசி வந்தனோபசாரம் கூற சபை இனிது கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## ஸ்ரீமான் ஷண்முகவேல் நாடார் வாசகசாலை, தூத்துக்குடி.

இவ்வாசகசாலையின் ஆதரவில் பொதுக்கூட்டம் ஒன்று சாரைப்பேட்டை சபா மண்டபத்தில் 20-2-27 ல் மாலை 6–30 மணிக்கு ஸ்ரீமான் தே. அ. ச. அய்யம்பெருமாள் நாடார் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

அவ்வமயம் குலசேகரபட்டணம் திருவாளர் ச. முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்கள் "திருவிளையாடல் மாமனாக வந்து வழக்குரைத்த படலம்" என்னும் பொருள்பற்றி தாயின் அமுதமொழியால் நாம் பெற்ற பயிற்சியாகிய தெய்வத் திருமொழி தென் மொழியிலேயே புராணங்களனைத்தும் பிறந்தனவெனவும், காலமாறுபாட்டால் தென்னாடு தாழவும், வட நாடு உயரவும் புராணங்களெல்லாம் வட மொழியில் ஆக்கப்பட்டு, தென்மொழி மறைந்ததென்றும், பின்னர் தமிழுக்குப் புததுயிரளிக்கப் பிறந்த பரஞ்சோதி முனிவர் பெருமான் திருவிளையாடல் புராணத்தை தமிழில் ஆக்கினரென்றும் சொல்லி கதையின் வரலாற்றினையும் மிக விரிவாக நீண்ட நேரம் உபந்நியாசித்தார்கள்.

அடுத்தாற்போல் "திருக்குறள்" என்னும் பொருள்பற்றி திருவாளர், ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள் இரத்தினச் சுருக்கமாகப் பேசினார்கள்.

அக்கிராசனர் முடிவுரைக்குப் பின் அரி. அ. சு. துரைச்சாமி நாடார் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு தலைவர்களுக்கும், உபந்நியாசகர்களுக்கும் புஷ்பஹாரஞ் சூட்டி கூட்டம் இனிது கலைந்தது என்று காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார்குலமித்திரன்

அக்ஷய ஹு மாசி மீ ௰௭ உ

## வேலைத் திட்டம்.

நாடார்மகாஜனசங்கம்முதல் நான்கு வருஷங்களில் யாதொரு வேலைத்திட்டமும் போட்டுவேலை செய்யாமல் கான்பரன்ஸுகள் மட்டும்கூட்டிக் கொண்டுவந்தது. நான்காவது கான்பரன்ஸ் முடிவில் சங்கம் நிர்மாணிக்கப் பெற்று சரியான வேலைத் திட்டங்களமைத்துப்பிரசாரம் செவ்வனே நடைபெற்று வந்தது. நாடார் சமுகமனைத்தும் நாடார் மகாஜன சங்கத்தின் நன்மையை நன்குணர்ந்து சங்கத் தீர்மானங்களை யெல்லாம் தலைமேற் கொண்டு நடந்தார்கள். கிராமப் பாடசாலைகளும், சங்கங்களும்புதிதுபுதிதாகவுண்டானதுடன்புத்துணர்ச்சியுங் காணப்பட்டது. 1921 ஹுத்திய ஜனக்கணிதத்தில் முன்னைப்பார்க்கிலும் விசேஷக் கல்விப் பயிற்சி ஏற்பட்டிருப்பதாக விளங்கிற்று.

சங்கத்திற்கு இன்னும் விசேஷ மூலதனமிருந்தால் நாடார்கள் முன்னேற்றம், நாட்டார் பிரமிக்கத்தக்கதாயிருக்குமென்பதை நன்கறிந்த நாடார் சமுகத் தலைவர்கள் ஒரு லக்ஷ ரூபாய் மூலதனம் சேர்ப்பான் வேண்டிச் செய்த பெரு முயற்சியினாலே குறித்த தொகை கிடைக்காமற்போனாலும், ஒரு சில தொகையாவது சேர்க்கப்பட்டிருக்கிறது. அதை விருத்தி செய்யும் விதமும் தீர்மானிக்கப்பட்டு விட்டது. லக்ஷக்கணக்கான நாடார் ஜன சமுகம் சுமார் நாற்பதினாயிர ரூபாய் மூலதனத்தினாலே நன்மையான சாதகமடைந்துவிடுமென்று நம்ப முடியாது. நாடார் சமுகத்தைப் பல துறைகளிலும் சீர்திருத்தம் செய்வதற்கு நான்கு லக்ஷம் ரூபாயாவும் காணாதென்று தான் சொல்ல வேண்டும். ஆகையால் நாற்பதினாயிரம் ரூபாய் சேர்ந்து விட்டது; நமது வேலையும் தீர்ந்துவிட்டது என நாடார் சமுகத் தலைவர்கள் பாராமுகமாயிருந்தால் மிகவும் ஏமாற்றமாய்ப் போகும். நாடார் ஜன சமுகமும் நாற்பதினாயிரத்தையொரு பெரிதாக நம்பி, நமது கடமையாதென்பதை யுணராமல் வாழாதிருப்பின் அபாயகரமாகுமென்றே சொல்லலாம். இரண்டு வருஷங்களில் இருந்த கஷ்டத்திற்கு ஒரு சிறிது சாதகந்தான் இந்நாற்பதினாயிரத்தாலேற்பட்டிருக்கிறதே யன்றி பூர்த்தி பெற்றுவிட்டதென்று சொல்ல முடியாது. இன்னும் மென்மேலும் பணம் சேகரிக்க வேண்டிய வேலைகளும், சமுகசீர்திருத்தக்குறித்துச்செய்ய வேண்டிய வேலைகளும் பல விருக்கின்றன வென்பதை ஒருவரும் மறக்க முடியாது. ஒரு சில நகரங்களில் நாடார்கள் கல்வி, கைத்தொழில், வர்த்தகம் முதலியவைகளிற் சிறந்து விளங்குவதைக்கொண்டு நாடார் சமுகமனைத்தும் சிறப்புடையதென்று செப்ப முடியாது. வெகு உயரமாகப் பிரகாசமாகத் தோன்றும் கோபுரமானது வெகு காலம் அழியாமற் சிறப்புடன விளங்குவதற்கு அதன் அஸ்திவாரமும், பக்கச் சுவர்களுமே காரணமாகும். அஃதிலதேல் அழிந்தே போகும். அதுபோல் நாடார் ஜன சமுகம் சிறப்பாகவும், பலமுள்ளதாகவும் என்றும் நின்றிலங்க வேண்டுமானால் நகரங்களைப்போல் கிராமங்களும் கல்வி, கைத்தொழில், வர்த்தகம், ஆசார சீர்திருத்தங்கள் முதலியவெல்லாவற்றிலும் சிறப்பாயிருத்தல் வேண்டும். இலதேல் நிர்வாணன் தலையலங்காரமென நினைக்க இடமுண்டாகும்.

ஆகையால் சமுகத் தலைவர்களும, சீர்திருத்தக்காரர்களும் இன்னும் பெரியதோர் வேலைத்திட்டம் போட்டு சமுகப் பிரசாரத்தை கொஞ்சமும் தாமதமின்றி உடனே ஆரம்பிக்க வேண்டும்.

நமது கவர்ன்மெண்டார் நம் நாட்டிற்களித்த புதிய சீர்திருத்தம் நாடார்களுக்கும் கிடைத்தது; நாட்டார்கள் அனுபவிப்பதுபோல் நாடார்களும் அனுபவித்தோம்; அதில் நாடும், நாமும் கண்டுகொண்டதென்ன? மற்றொருவர் செய்து கொடுக்கும் சீர்திருத்தம் சீர்திருத்தமே யாகாது. நாமே திருந்திக் கொள்வது தான் சரியான சீர்திருத்தமாகுமென்பதே யாம் இந்த இரகசியத்தை அறிவாளிகள்எப்போதும் வற்புறுத்தித்தான் வந்திருக்கிறார்கள். நம்மை நாமே சீர்திருத்திக் கொள்ள வேண்டுமென்பதும், நமக்கு நாமே துணை யென்பதும் நாம் அனுபவபூர்வமாய்க் கண்ட காரியம் என்று வண்டவரனேகருண்டு. அவ்வாக்கியங்கள் அகவாழ்க்கையிலும் புறவாழ்க்கையிலும் எவ்வளவு பயன் தந்திருக்கிறது; தருகிறது; தரப்போகிறது என்பதை நாம் சீர்தூக்கிப் பார்த்தால் நாமெதற்கும் பிறவற்றையே பெரிதாய் நாடாமல் தைரியத்துடன் சுதந்திர புருஷர்களாய்எப்போதும் நம்மை நாமறிவதே; நமக்கு நாம் துணையாயிருப்பதே நலமென்பது புலப்படும்.

ஆகவே வந்திருக்கிற, வந்து கொண்டிருக்கிற, வரப்போகிற எச்சீர்திருத்தங்களுக்கும் உரித்தானவர்களாக நாம திருந்த வேண்டியது மிகவுமவசியமென்பதை நாடார் சமுகம் நன்குணரும் பொருட்டு நாடார் சமுகத் தலைவர்களும், அபிமானிகளும் காலந்தாழ்த்தாமல் வேலை யாரம்பிக்க வேண்டுமென்று விரும்புகின்றோம்.

### குடிசைத் தொழில் பணிவான வேண்டுகோள்.

பனையிலிருந்து உற்பத்தி செய்யப்பெறும் பதனீரைக் கொண்டும், கரும்புக் கட்டியைக் கொண்டும், கரும்பிலிருந்து உற்பத்தி செய்யப் பெறும் கரும்புச் சாற்றைக் கொண்டோ, அல்லது சர்க்கரையைக் கொண்டோ தனித்தனி வீடுகளில் குடிசைத் தொழிலாக, மோரிஸ், சாவா முதலிய இடங்களிலிருந்து வருகிற மணல் சீனி (அஷ்டகிராம் சீனி) மெதுவு சீனி (கொழைவு சீனி) செய்யக் கூடிய வகை விபரம் தெரிந்தவர்கள் தயவு செய்து "நாடார்குல மித்திர" னில் விபரமாய் வெளியிடும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

க. பெ. சங்கரலிங்கம்,
காரியதரிசி,
கதர் பிரசார சபை, விருதுநகர்.

## இரண்டே மாதங்கள் தான் இருக்கின்றன.

நமது "நாடார்குலமித்திரன்" க்ஷேம நிதித் தர்மப்பண்டு லாட்டரிப்பிரைஸ் எடுக்குந்தினமாகிய 5—5—27 இன்னும் இரண்டே மாதங்கள் தானிருக்கின்றன. நாம் குறிப்பிட்ட தொகை சேர்வதற்கு மொத்தம் 33000 டிக்கட்கள் தான் விற்கவேண்டும். 22 டிக்கட்டுகளுள்ள 1500 புஸ்தகங்களே. இது வரையும் நமது சந்தா நேயர்களுக்கும் மற்றுமனேக நண்பர்களுக்கும் ஏராளமாக புஸ்தகங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அனேகர் விற்றனுப்புவதாக வாக்களித்திருக்கிறார்கள். இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களிற்றான் நமது சந்தாதாரர்கள் அதிகம் அங்குதான் புஸ்தகங்களை அதிகமாக அனுப்பியிருக்கிறோம் இவ்விரண்டு ஜில்லாக்களுக்குமனுப்பியிருக்கிற எல்லாப்புஸ்தகங்களும் பூர்த்திசெய்து வந்தாலுமே தொகை பூர்த்தியாகிவிடும். ஆனால் காலநிலை சரியில்லையென்ற ஒரு காரணத்தால் நம்மித்திரனை மறந்துவிட மாட்டார்களென்றே நம்புகிறோம். தற்போது மித்திரனை ஆதரித்துவருகிற சந்தாதார்களெல்லாம் கட்டாயமாக ஆளுக்கொரு புஸ்தகம் பூர்த்திசெய்தனுப்பினாலும் பிரைஸ் பூர்த்தியாகிவிடும். ஆகையால் எல்லா நண்பர்களுக்கும் அனுப்பியிருக்கிற புஸ்தகங்களை மித்திரன் பாலன்பு கூர்ந்து பிரயாசைப்பட்டு விற்றாவது அல்லது தங்கள் தங்கள் சொந்தத்திற்கு எழுதிக்கொண்டாகிலும் கூடுமானவரையும் பூர்த்தி செய்தனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இன்னுமிரண்டு மாதங்கள் தானிருக்கின்றன. பங்குனி மீ 30 உக்குள் குறிப்பிட்ட தொகைமட்டும் சேருமா, அல்லது கூடுமோ, சிறிது குறையுமாவென்று ஒரு கணக்குப் பார்த்துக்கொண்டு குறித்தகாலத்திலேயே பிரைஸ் எடுப்பதற்கு வேண்டிய வேலைகளை விரைவாய்ப் பார்க்கவேண்டியதிருப்பதால் புத்தகம் பெற்ற அன்பர்கள்யாவரும் பங்குனி மீ 30உக்குள் கூடுமானவரையும் பூர்த்தி செய்து அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

நாடார்மகாஜன சமுகமுன்னேற்றத்திற்கு "நாடார்குலமித்திரன்" இன்றியமையாப் பெருஞ்சாதனமென்பதை நாடார் சமுகம் நன்கறிந்திருப்பதால் நமக்கு நல்லொத்தாசை கிடைக்குமென்று பூரணமாய் நம்பியே நாமிதை யாரம்பித்தோம். ஆகையால் நாடார் குல நண்பர்கள் யாவரும் "நாடார்குல மித்திரன்" க்ஷேமத்தை நன்கு கவனித்து நாமனுப்பிய புஸ்தகங்களையெல்லாம் பூர்த்திசெய்து அனுப்பும்படி மீண்டும் வேண்டிக்கொள்ளுகிறோம். நாடார்மகாஜனசங்கம் ஏழை மாணவர்கள் சகாய நிதிக்கு உதவி செய்த அபிமானிகளும் பிரசாரகர்களும் நமக்கு மிகுந்த ஒத்தாசை செய்யும்படி வேண்டுகின்றனம் மித்திரனை வாரப்பதிப்பாக்க மிக்க ஒத்தாசைசெய்து ஊக்கமளித்த இரக்கமுள்ள நாடார் குலாபிமானிகளும் இச்சமயம் நம் மித்திரனை மறந்துவிட மாட்டார்களென்றே நம்புகிறோம். அவர்கள் மனம் வைத்தால் ஆகாததொன்றில்லை. மித்திரன் பக்கம் விரிந்து பலவிஷயதானங்கள்புரிந்து நண்பர்கள் மத்தியில் நன் மதிப்புடன் விளங்குவதற்கு இரக்கமுள் நமது பங்கிலிருக்க வேண்டுகின்றனம்.

### விசேஷக் கூட்டம்.

அருப்புக்கோட்டை, ஸ்ரீசாலிமாசிஷி கோத்திர முன்னேற்ற சங்கத்தின ஆதரவில் 22—2—27-ல் ஸ்தல டிப்டி தாசில்தார் ஸ்ரீமான் லெக்ஷுமணபிள்ளையவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஓர் விசேஷக் கூட்டம் வேலாயுதபுரத்தில் நடைபெற்றது. பல ஜாதி முக்கியஸ்தர்களும் அழைப்பிற்கிணங்கி விஜயஞ் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. அவ்வமயம் இவ்வூர் அமெரிக்கன் மிஷன் ரெவரெண்டு கனம் ஓயிட்துரையவர்கள் தமிழில் "கல்வி" என்னும் விஷயத்தைப்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

## சர்வதேசகால வர்த்தமானங்கள்.

ஊரில் மாரியம்மன் கோவிலில் கொடை ஏற்பட்டால் கள்ளுக் கடை, சாராயக் கடைகளில் வாழை மரங்கள் நட்டு, கியாஸ் லைட்டுகளும் போட்டு சிறப்பான பந்தலமைத்துக் கொள்வது பல கிராமங்களில் வழக்கமாயிருந்து வருகிறது.

அதுபோலவே சீனாவில் ஓர் விததேசியக் கிளர்ச்சி ஏற்பட்டிருப்பதின் பயனாய ஐரோப்பாவின் முக்கிய தேசங்கள் தங்களை எவ்வாறு அலங்காரம் பண்ணிக் கொள்வதென்ற கவலையிலேயே ஈடுபட்டிருப்பதாகத் தெரிகின்றன. ஏனென்னில் சென்றஐரோப்பிய யுத்தத்திற்கு முன் ஐரோப்பாக் கண்டமே இரு முக்கியமான பிரிவாகப் பிரிந்து யுத்தத்திற்கோ, சமாதானத்திற்கோ ஆதாரமாய் நிலை பெற்றிருந்தது. இவைகளில் ஒன்று "முக் கூட்டு என்டென்றி" என்றும் மற்றொன்று "முக்கூட்டு அலையன்ஸ்" என்றும் சிறப்புப் பெயர் பெற்று வாழ்ந்து வந்தன.

யுத்தத்திற்குப் பின்னும் ஓர் சிறு மாறுதலுக்குட்பட்டு மேற்படி சேர்க்கை சில காலம் நிலைபெற்றே இருந்து வந்தது. ஆனாலும் லோகர்னோ உடன்படிக்கையினாலும், ஜெர்மனி சர்வதேச சங்க மெம்பர் ஸ்தானத்தைப் பெற்றுக்கொண்டாலும் மேற்படி சேர்க்கை பிரயோஜனமற்ற தானநிலைமை யடைந்து தொலைந்து போய்விட்டது. அதன் ஸ்தானத்தில் வேறொரு சேர்க்கை இன்னமும் ஏற்படவில்லை. சீனாவின் போராட்டம் அவ்விதம் இரு சேர்க்கைகளை அதி சீக்கிரம் உண்டுபண்ணி வைக்குமென்றே பல சம்பவங்களிலிருந்து தெரிகிறது. மத்திய தரைக் கடலிலும் வட ஆப்பிரிக்காவிலும் ஆங்கில, பிரஞ்சு போட்டி ஏற்பட்டிருப்பதும், பால்க்கன் நாடுகள் சம்பந்தமாய் பிரான்சுக்கும் இத்தாலிக்கும் ஏற்பட்டிருக்கும் முரண்பட்ட போராட்டையும் ஐரோப்பாவின் நிரந்தர உபத்திரவத்துக் காதாரமாகுமென்றே தற்போது ஒருவாறு தெரிய வருகிறது. இதனாலேயே சீனா சம்பந்தமாய் இங்கிலாந்து வெளியிட்ட அறிக்கையை இத்தாலி ஆமோதித்தும் பிரான்ஸ் ஆக்ஷேபித்தும் அபிப்பிராயம் எழுதியிருப்பதாகும். இவ்விதமான நிலைமையில் தான் இங்கிலாந்தின் அந்நிய நாட்டுக் காரியதரிசி இத்தாலியின் பிரதம அதிகாரியான முசோலோனியுடன் முக்கியமான இரு சமயங்களில் அந்தரங்க சம்பாஷணை நடத்தியும் வந்ததாக அபிப்பிராயப்படுத்தப்படுகிறது. எப்படியிருந்தபோதிலும் இத்தாலியும், இங்கிலாந்தும் நெருங்கிய சிநேக சம்பந்தமுடையனவாகிறது போலவே பிரான்சு மேற்படி இரு தேசங்களுடனும் அபிப்பிராய பேதமேயடைந்து வருகிறது. ஆகவே இங்கிலாந்தும், இத்தாலியும் ஒரு சேர்க்கையாகி தமக்கு மற்றும் நண்பர்களைக் கண்டுபிடிக்கும். அடுத்த ஓர் சேர்க்கையை உண்டு பண்ண வேண்டியது பிரான்ஸ் தேசத்தின் பொறுப்பாகும். இதற்காக பிரான்ஸ் ஜெர்மானியுடன் நெருங்கிய சிநேகம் பாராட்டிக் கொண்டு ஓர் வித வியாபார சம்பந்தமான ஒப்பந்தமும் செய்து கொண்டிருக்கிறது. ஜெர்மானியர் பிரான்சுடன் சிநேகமாய் வாழ விரும்புகிறது போலவே இத்தாலியரோடும் சிநேகமாய் வாழ்வதே தங்கள் கருத்தென்பதிற்கிணங்க இத்தாலியருடனும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டிருக்கின்றனர். ஆகவே பிரான்ஸ் மேற்றிசையைத் தனது சகாயத்திற்காக நோக்குவதுபோல் தெரிகிறது. சீனா விஷயமாய் ஜப்பானுடன் கலந்து ஜப்பான் ஸ்தானாபதியின் கருத்துக்கிசையவே இங்கிலாந்துக்கு பதில் சொல்லியதாக இரு தேசங்களாலும் ஒருவாறு ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாய்த் தெரிகிறது. ஜெர்மனி, இத்தாலிக்கும், பிரான்சுக்கும் இடையே இருந்து சமயோசிதம் போல தனது பலத்தை எப்பக்கத்துக்கேனும் தந்துதவக் கூடிய நிலைமையிலிருக்கிறது. அப்படிச் செய்ய ஜெர்மனிக்கு நியாயமும் உரிமையும் உண்டு. இனி பிரான்சு ஜப்பானுடன் ஐக்கியமாயிருக்க விரும்பினால், சீனாவுக்கும், பர்மாவுக்கும் இடையே உள்ளதும் பிரான்சுக்காரருக்குச் சொந்தமானதுமான இந்

## திருச்செந்தூர் மண்டபம்.

திருச்செந்தூர் தக்ஷணஹிந்து நாடார்களது மண்டபமானது ஆதியில் காயாமொழி ஸ்ரீமான் ராமலிங்க ஆதித்த நாடாரவர்களின் தலைமையின் கீழ் பக்குவபரிபாலனமாக நடத்தப்பட்டு வந்தது. அது சமயம் அப்பெரியாருக்கு பலவித இடைஞ்சல்களுள்ள சொந்த ஜோலிகள் குறுக்கிட்டமையால் ஆறுமுகநேரி ஸ்ரீமான் எஸ். பொன்னையா நாடாரவர்களை நியமித்தனர். சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் இவரும் ஷை மண்டப விஷயமாயுள்ள பொது வேலைகளைக் கவனிப்பதில் சற்றுத் தளர்வடைந்திருந்தார். ஆகவே அக்காலத்தில் மண்டபமானது செப்பனிடப்படாமல் சுவர்களெல்லாம் உவர்பொறிந்து உதிர்ந்து ஜனங்கள் தங்குதற்கான வசதியோடில்லாதிருந்தது. அது சமயம் உள்ளூரில் ஷை மண்டபத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டிய வேலைக்கு சந்திர நாடார் என்ற ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இவர், தலைவர்களும் நிர்வாகிகளும் மண்டப விஷயத்தில் பாராமுகமாயிருப்பதை யறிந்து மண்டபத்திலேயே சாஸ்வதமாகக் குடியிருந்து கொண்டு தன் பெயராலேயே தீர்வை முதலானவைகள் செலுத்திபதுமல்லாமல் ஒத்தி அடமானம் செய்து கிரயமாக்கவும் ஆரம்பித்து விட்டார்.

இவ் விபரம் காயாமொழி நாடார்களுக்குத் தெரியவே அவர்கள் ஆங்கு சென்று எதிர்வாதம் புரிந்த சந்திர நாடாரை வெளியேற்றிவிட்டனர். அதன் மேல் ஸ்ரீமான் ஆர். புதுகயினு ஆதித்தநாடாரவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டனர். புதுத் தலைவர் நியமிக்கப்பட்டது முதல் மண்டபம் நல்ல சீர்திருத்தத்தையடைந்தது. தலைவருடைய சுற்றுப் பிரயாணத்தில் நாங்குநேரி அம்பாசமுத்திரம் தாலுகாவிலுள்ள பனைக்குளம், கூடங்குளம், பண்ணையூர் முதலிய பலவூர்களிலுள்ள நாடார்மக்கள் மகா உற்சாகங்கொண்டு பொருளுதவி செய்தனுப்பினர். தெற்கே உடன்குடி, சிவகுடி, ஏற்று தட்டார்மடம் முதலிய ஊர்களிலுள்ள நாடார்களும் அவரவர்களால் இயன்றவாறு பொருளுதவிசெய்தனர். எனவே ரூபாய் 1000-க்கு மேலாகத்திரண்டதால் மண்டபம் புதுப்பிக்கப்பட்டு உன்னதநிலையை அடைந்தது.

செந்தூர் தளவரிசையில் தக்ஷணஹிந்து நாடார்களது மண்டபத்தைவிடச் சிறந்த கட்டடம் இன்னும் கட்டப்படவில்லை. அவ்வளவு மகோன்னத பதவியில் நமது மண்டபம் இருக்கிறது. ஸ்ரீமான் ஆர். புதுகயினு ஆதித்தநாடாரவர்களின் பார்வைக்கு வந்த சில காலத்திற்குள்ளாக மாதாந்த உற்சவம் முதல் விசாக உற்சவம்வரை சகல உற்சவாதிகளிலும் தவறாமல் தீபங்களேற்றி வழக்கமாக காணிக்கை வசூல் செய்யப்பட்டது. ஜனங்கள் தங்குவதற்கு நல்ல வசதி செய்திருப்பதுமல்லாமல் அவர்களுக்குவேண்டிய ஜலசப்ளையும் மண்டபத்திலேயே செய்யப்பட்டிருக்கிறது. ஜனங்களும் சௌகர்யத்தை உத்தேசித்து வரவரக்கூடிக்கொண்டே வந்தமையால் இப்பெரிய மண்டபமுங்கூட வசதிக்குப் போதாதென்று கீழ்ப் பக்கத்திலுள்ள நிலங்களையும் கிரயத்திற்கு வாங்கி கட்டப்பட்டும் புதுப்பிக்கப்படாமலும் முடிக்கப்படாமலுமிருக்கிறது. வசூலான பணங்கள் அப்போதைக்கப்போது மண்டப விஷயமாகச் செலவானபடியால் மேற்கொண்டு கட்டடங்களைப் புதுப்பித்து முடிப்பதற்கு பணம் வேண்டியதிருக்கிறது.

ஒரு சமயம் காயாமொழிக்குவடக்கேயுள்ள ஊர்களில் தலைவரவர்கள் சுற்றுப்பிரசாரம் செய்கையில் ஆங்குள்ள இரண்டொரு பிரமுகர்கள் அபிப்பிராய பேதத்தால் எதிர்ப்பிரசாரம் செய்ததாகத்தெரிகிறது. அதன் மூலம் தலைவரும் மனம் வருந்தி பிரசாரத்தை நிறுத்திக்கொள்ள நேரிட்டது. எனவே மேலாக வேண்டிய பணமில்லாமையால் புதிதாக வாங்கிக்கட்டிய கட்டடங்கள் பூர்த்திபெறாமற்போனது விசனிக்கத்தக்கது.

உற்சவகாலங்களில் மண்டபத்துக்கு வரும் ஜனங்களாவது காணிக்கை செலுத்தி வருகின்றனரா என்று கவனிப்போமாகில் மாசித்திருவிழா உற்சவகாலத்திலேயே அற்ப சொற்ப பணம் பிரிகிறது. அப்பணமும் அம்பாசமுத்திரம் நாங்குநேரித்தாலுகாக்களிலுள்ள நாடார்களாலேயே கொடுத்துதவப்படுகிறது. அங்குள்ளவர்கள் வருடம் ஒருதரம் மாசி உற்சவத்துக்கு மட்டும் வருகின்றபடியால் அந்தச் சமயம் மாத்திரம் காணிக்கை வசூலாகி வருகின்றது. அத்தொகையிலிருந்து மண்டபத்தைச் சுத்தமாகவைத்துக்கொள்ளவேண்டிய வேலைக்கு ஒரு நாடார் குலமாதை நியமித்திருக்கிறதுமல்லாமல் வருடம் ஒருதரம் மண்டபத்துக்கு வெள்ளை வைத்தும் திருவிழா முதலிய முக்கியமான பெரிய உற்சவாதிகளில் தீபமேற்றப்பட்டும் ஜலசப்ளை செய்யப்பட்டும் வரி செலுத்தப்பட்டும் வருகிறது. மாதாந்தம் பூசம் முதலிய சகல உற்சவங்களுக்கும் வழக்கம்போல்தீபமேற்ற வேண்டுமானால் பணம் வேண்டியதிருக்கிறது. அதனைக் கொடுப்பவர் யார்? பணக்காரர் என்று சொல்லிக் கொள்பவர்கள் ஒரு பைசாவும் கொடுக்கிறார்களில்லை. ஆனால் மாதாந்தம் தோறும் கூட்டத்துக்கோ குறைவில்லை. திருச்செந்தூர் தாலுகாவிலுள்ள பல ஆயிரக்கணக்கான நாடார் மக்கள் பாக்கியில்லாமல் வந்து விடுகின்றனர். இவர்கள் காணிக்கையென்பதே போட்டிரார்கள். பலதுள்ளி பெருவெள்ளம் என்றபடிக்கு நபர் ஒன்றுக்கு காலணாவாவது கொடுங்கள் என்று நயந்து நவின்றாலும் கவனிக்கிறார்களில்லை. ஆனால் எங்களது மண்டபம் என்று உரிமை பாராட்டுவதில் இவர்கள் வெட்கப்படுவதுமில்லை. அனுபவிப்பதிலும் பின்வாங்குவதில்லை. இந்த நிலைமையில் யாரைத்தான் குறைகூறுவது? பானையிலிருந்தாற்றானே அகப்பையில் வரும்? மாதாந்தம் பூசம் முதலிய உற்சவங்களுக்கும் பணம் வேண்டுவது அவசியமல்லவா? ஆகவே ஜனங்களைக் காணிக்கை போடச்செய்யவேண்டும். காணிக்கை தொகை திரண்ட பின்னரும் தலைவரவர்கள் ஷை உற்சவங்களுக்கு தீபமேற்றச் செய்யாதிருந்தால அப்பொழுது நாம் தலைவர்களைக் கேள்வி கேட்கலாம். அதற்கு முன்னால் கேட்பதற்கு நியாயமில்லை தான்.

ஜனவரி மீ 31உ நாடார்குல மித்திரனில் தோப்புக்குளம் ஸ்ரீமான் சு. பு. மா. வெள்ளையநாடாரவர்கள் இது விஷயமாய் கொஞ்சம் எழுதியிருந்ததால் நாமும் அக்கரைமேலிட்டு விரிவாய் எழுத நேரிட்டது. ஆகையால் தக்ஷணநாட்டு நாடார்மக்களே! சகல உற்சவாதிகளுக்கும் முந்திய வழக்கம்போல் தீபங்களேற்றி சகல சௌகர்யங்களும் செய்யவேண்டுமானால் காணிக்கை செலுத்துவதற்கு முந்துங்கள். உற்சவ காலங்களில் வரும் பொழுதெல்லாம் உங்களாலியன்ற உதவி செய்வீர்களானால் உங்களுக்கும் நன்மையுண்டாகும்; நீங்கள் கேள்வி கேட்கவும் இடமிராதபடி நடத்திவரப்படும். மண்டபம் உங்கள் தயவை எதிர்பார்க்கிறது. சுபம்!

அ. ப. ஆதித்யர்,

காயாமொழி.

---

தோச்சினு என்னும் நாட்டுக்குள் ஜப்பானியர்கள்யதேச்சையாய் தங்கள் வியாபாரத்தைக் கொண்டு விற்க உரிமை பெற விரும்புவார்கள். இதுவரை ஜப்பானின் கருத்துக்கு இணங்கவில்லையாயினும் இன்று தனது பக்கத்திலுள்ள தேசங்களின் நிலைமையை உத்தேசித்து பிரான்ஸ் இது விஷயமாய் ஜப்பானுக்கு இணங்குமெனறே பெரும்பாலும் நம்பப்படுகிறது. ஜப்பானும், இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய இரு தேசங்களின் சேர்க்கையாலும், ஆஸ்திரேலியா நியூசிலண்டு ஆகிய தேசங்களுடன் தனக்குள்ள விரோதத்தாலும், சிங்கப்பூர் கடற்படை ஸ்தாபன பயத்தாலும் பிரான்சின் துணையை அதிகவிரைவாய் வரவேற்குமென்றே தெரிகிறது. ஆகவே யுத்தத்திற்கு முன் ஏற்பட்டது போன்ற ஓர் சேர்க்கை ஏற்கனவே தற்கால தேச சரித்திரங்களில் ஏற்பட்டு விட்டதென்றாவது கூடிய சீக்கிரம் ஏற்பட்டு விடுமென்றாவது தான் தோன்றுகிறது. பிரான்ஸ் தேசத்தவர் கிழக்கில் ஜப்பானுடன் மாத்திரமல்லசிரியாவுடனும் உடன்படிக்கை செய்து கொண்டிருப்பதுடன் அங்கோராவுடன் நெருங்கிய சம்பந்தம் கொண்டாடி வருகின்றனர். சீனாவின் நிலைமையிலுண்டாகும் மாறுதலைப்பொறுத்து இந்த சம்பவங்களும் விசாலித்துக் கொண்டுபோகும்.

D. B. S.

---

# மதிப்புரை.

### கிறிஸ்து பகவான் கிருபாகீர்த்தனங்கள்.

இந்நாமங்கொண்ட கீர்த்தனைப் புத்தகமொன்று நமது பார்வைக்குக் கிடைத்தது. உண்மைக்கும், சத்தியத்திற்கும் உயிரையும் திரணமாகக் கொள்ளுதல் மாணப் பெரிதெனும் சித்தாந்தத்தை நடத்திக் காட்டிய உலகம் புகழ் இயேசுகிறிஸ்து பகவான் பேரில் இன்னிசைப் பொருத்தத்துடனும், விஷயக் கருத்துக்களை உள்ளடக்கியும், சிறந்த தமிழ் கொண்டு, பல வர்ண மெட்டுகளிலும், தெலுங்குக் கீர்த்தனை ராகங்களிலும் ஆக்கப்பெற்றுள்ளபாக்கள்; மிகவும் போற்றற்குரியதே. அதிலும், இதன் ஆசிரியராகிய, தமிழ் பண்டிட் ஸ்ரீமான் ஆ. அ. குமரகுருபர ஆதித்தரவர்கள் பிறமதமாகிய சைவசமயத்திற் பிறந்திருந்தாலும், எம்மதமும் சம்மதமே எனுந்திட சித்த சமயாதீதராய் இவ்வகைக் கைங்கரியத்தைக் கையாண்டதானது அறிவினை குறித்தாமெனக் கொள்கின்றோம். ஆசையால் பக்திப் பரவசத்திற்கோர் முக்கிய சாதனமாயுள்ள பஜனைக்குப் பெருந்துணையாயிலங்குமிப் புத்தகத்தை ஒவ்வொருவரும் வாங்கி இன்புறுமாறு வேண்டுகின்றோம். உயர்ந்த பேப்பரில் அழகாக பயிண்டு செய்யப்பட்டது. விலை அணா 0—4—0.

விலாசம்:—

A. A. குமரகுருபரர், தமிழ்பண்டிட், S. B. K. ஹைஸ்கூல், அருப்புக்கோட்டை.

---

### பாலபோதினி.

இப்பெயர் புனைந்த மாதச் சஞ்சிகையின் 9-வது வருட முதல் பிரதியொன்று நமதுபார்வைக்குக்கிடைக்கப்பெற்றோம். இதில் பாலர்க்கான நீதி போதங்களும், புனித சரித்திரங்களும் எளிய நடையில் ஆசிரியர் ஸ்ரீமான் திரு. அ. சுப்பிரமணிய பாரதி அவர்களால் கையாளப்பட்டிருப்பது பொருத்தமே. இந்து மதத்தை விளக்கும் சரித்திரங்கள் தொடக்கப்பட்டிருப்பதைக்காணும் மாணவர் யாவரும் படித்தறிய அவா வுறுவரென்பது எமது துணிபு. விலாசம், ராமஸ்வாமி சாஸ்திரிலு அண்டு சன்ஸ், வண்ணாரப்பேட்டை, சென்னை.

---

### விநோதினி.

புத்தகரூபங் கொண்ட இம்மாதப் பத்திரிகையின் மாதிரிப்பிரதிகள் இரண்டு வரப் பெற்றோம். பல ஆசியப் படங்கள் அமைப் பெற்றதாய் பல் விஷயங்களும் நிறைப் பெற்றிருக்கிறது. பக்கம் 36 எனினும் விஷயங்கள் சுருக்கச் சொல்லி விளக்கவைத்தலென்ற முறையில் நாலு வர்த்தமானங்களையும் கொண்டிருக்கின்றது. வருட சந்தா ரூ 2. விநோதினி காரியாலயம், வேப்பேரி, சென்னை என்ற விலாசத்திற்கெழுதி வேண்டுவோர் பெற்றுக் கொள்ளலாம்.

---

### இந்தியத் தாய்.

ஸ்ரீரெங்கத்தினின்றும் வெளிபிடப்பெறும் இப்பத்திரிகையின் ஜனவரிமீ பிரதி யொன்று வரப் பார்த்தோம். சந்தா ரூ 1. [illegible] பக்கங்களுடையது. நீண்ட விஷயங்கள் பல நிறைந்துள்ளன. கண்ணைக் கவரும் மாதிரியில் பாரதமாதா படம் ஒன்று முன் பக்கம் அமைக்கப்பட்டிருப்பதை நோக்கின்

---

### நிலக்கோட்டை.

நிலக்கோட்டை ஸ்ரீ மாரியம்மன் உற்சவம், நாளது அக்ஷய ஞு மாசி மீ 30உ (13—3—27) முதல் பங்குனி மீ 4உ முடியவுள்ள ஒவ்வொரு தினத்திலும் விசேஷ ஆராதனை ஊர்வலம், சொலுவிருத்தல், வாணவேடிக்கைகளுடனும் நடைபெறும். அவ்வமயம் பக்த கோடிகளனைவரும் வந்திருந்து வரப்பிரசாதமெய்த வேண்டுகிறோம். மற்றும் அதே வாரத்தில் மாட்டுத்தாவணி நடைபெறும். பல ஊர் வியாபாரிகளும் விஜயமாவார்களென்று தெரியவருகிறது என்று காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

---

### பிரிவுபசாரம்.

அருப்புக்கோட்டை, லோக்கல் பண்டு ஆஸ்பத்திரியிலிருந்து வந்த ஸ்ரீமான் டாக்டர் சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் இவ்விடமிருந்து மதுரைக்கு மாற்றப்பட்டிருக்கிறார். இன்னவர் இவ்வூரில் தாமிருந்த சொற்பகாலத்திற்குள் சர்வ ஜனங்களிடத்திலும் சுமுகமாய்ப் பழகியாதொரு பேதமின்றி யாவரிடத்தும் அளவளாவி அன்பு பாராட்டி வந்த பெருந்தகைமையை மதித்து இவ்வூர் சைவபாநு க்ஷத்திரிய ஹைஸ்கூல் மாணவர்கள் 23—2—27ல் ஷையாருக்கு ஸ்கூலில் ஓர் விருந்து நடத்தி உபசாரம் செய்தார்கள். அது காலத்தில் ஸ்தல அதிகாரிகளும், பிரமுகர்களும் விஜயஞ் செய்திருந்தனர் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

தற்கால தேசிப் போக்கை ஒத்ததாயிருக்கிறதெனத் தெரியவருகிறது.

---

### காங்கிரஸ் வாலா.

இவ்வாரப் பத்திரிகையின் முதலிரண்டிதழ்களும் கிடைக்கப்பெற்றோம். சென்னையினின்றும், பெரிதும் சுயராஜ்யக் கட்சியைத் தழுவி பிரதி சனிக்கிழமைதோறும் வெளியிடப்படுகிறது. முன் பக்கத்து அட்டையில் பாரதமாதா உருவமும், அதன் கீழ் சுதேசக் கொடிகளிரண்டும் ராட்டினத்துடன் அமையப்பெற்றிருக்கின்றன. உள்நாட்டு, வெளி நாட்டு வர்த்தமானங்களும், சுதேசிய உணர்ச்சி கொள்ளத்தக்க விஷயங்கள் பலதும் தீட்டப்பட்டிருக்கின்றன. வருடச் சந்தா ரூ 3. விலாசம்:—திருவல்லிக்கேணி, சென்னை.

---

### சுதேச நண்பன்.

இச்சிறந்த தமிழ் மாதப் பத்திரிகையின் இரண்டாமிதழ் கிடைக்கப் பெற்றோம். உயர்ந்த கிளேஸ் தாளில் 32 பக்கங்களுடன் பிரசுரிக்கப்படுகிறது. வருட சந்தா உள்நாடு ரூ 2. வெளி நாடு ரூ 2—8—0. ஸ்ரீமான் எம். கே. எ. முஹம்மது இப்ராஹீம் அவர்கள் இதன ஆசிரியராவர். விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சித் துணுக்குகளும், மானிடர் ஆற்ற வேண்டிய கடமைகளை வலியுறுத்தும் கட்டுரைகளும், பல சில்லறைச் சமாச்சாரங்களும், கதைத் தொகுதியும் இதில் மிளிர்கின்றன. வேண்டுவோர் சுதேச நண்பன் ஆபீஸ் 63, 29 வீதி இரங்கூன் என்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

### அருணகிரி.

இஃது ஸ்ரீமான் சி. ராம. இராமநாதன் அவர்களின் ஆசிரிய பத்தியத்தின் கீழ் வாரமொருமுறை பள்ளத்தூரினின்றும் வெளியிடப்பெறுகிறது. சிறப்பாக செங்குந்தர் சமூகத்தின் முன்னேற்றங்கருதி வெளியிடப் பெறினும், பாரத நாட்டு சமஸ்த ஜனங்களுக்கும் உதவுமாப்போல் ராஜீய தேசீயத் துறைகளிலும் நுழைந்து அவ்வகையரிய கட்டுரைகள் பலதைத் தன்னகத்தே தாங்கி வருவதானது போற்றற்குரியதே. உள் நாடு வருட சந்தா ரூ 4. வேண்டுவோர் எழுதிப் பெறுக.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# கடிதங்கள்.

## கழுகுமலைச் சம்பவம்!

மிக்க திரவியம் படைத்தோரும், வேளாள குலத்தினருமாகிய ஸ்ரீமான் சுந்தரம்பிள்ளையவர்கள் கழுகுமலையில் ரூபாய் இருபதினாயிரம் செலவு செய்து சிறந்த சோர்கட்டடத்தை நிர்மாணித்திருக்கிறார்கள். அவ்வூரில் இதுவரை இருந்து வருகிற உயர்ந்த வீடு மேடை கட்டக்கூடாது என்ற காரணங்கொண்டு எட்டையாபுரம் ஜமீன்தாரவர்களின் ஆதரவாளர்கள் பலர்கூடி அக்கட்டடத்தின் முன் தாழ்வாரத்தை 10—2—27-ல் சேதப்படுத்தி விட்டனர். அதுவும் யாதொரு முன்னறிவிப்பின்றியும், சொந்தக்காரர் ஊரிலில்லாத நேரத்திலும் இக்காரியத்தை நடத்தியதானது யாவராலும் வெறுக்கத்தக்கதாகும். கவர்ன்மெண்டார் கவனித்து காருண்யங்காட்ட வேண்டுவது அவசியமாகும்.

அ. ராமசாமி நாடார்.

## மதுரை, பார்ப்பனரல்லாதார் முழக்கம்.

மனித சுதந்திரத்தையும், ஆண்டவன் படைப்பில் மனித சமூகத்தில் வித்தியாசமின்மையையும், கடவுளுக்கும் நமக்கும் இடையில் தரகர்கள் கூடாதென்பதையும் நிலைநாட்ட ஸ்ரீமான் இராமநாதன் அவர்கள் 7—2—26-ல் மதுரை மீனாக்ஷியம்மன் கோயிலுட்சென்று யார் உதவியின்றியும் தேங்காய் பழம் உடைத்துத் திரும்பிய பின்னர் பிராமணரல்லாத வாலிபர் பலர் தேங்காய் பழங்களுடன் அவ்வாறே சென்று அன்னையை ஆராதிக்கச்சென்றார்களாம். இதை மறுத்தும் அனுமதித்தும் கோயில் அர்ச்சகர்களுக்குள் பலத்த விவாதம் நடந்ததாம். காரியமும் இப்படியே. தற்போது போலீஸ் கான்ஸ்டேபிள்கள் வாயிற் காத்துவருவதோடு தேங்காய் பழம் கொண்டு செல்வோர் ஒவ்வொருவரும் விசாரணைக்குட்படுத்தப் படுகின்றனராம். அன்றிரவு 9½ மணிக்கு ஓர் கூட்டம் கூட்டப்பெற்று அதில் ஸ்ரீமான் இராமநாதன் அவர்கள் ஒரு மணிநேரம் பார்ப்பனீயக்கொடுமை குறித்து சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

டீ. ஆர். எம், சாமி.

## உச்சிப்புளியில் குறைபாடு.

இராமநாதபுரம் ஜில்லா உச்சிப்புளி ரெயில்வே ஸ்டேஷனுக்கும் ஊருக்கும் இடையிலுள்ள தாம் தண்ணீர் ஓட்டமாய் இருப்பதால் தற்போது தண்ணீரிலமைவில்லாத தருவைப்பாலத்தின் வழியிலும் பனைமரத்தெடலிலும் ஜனங்கள் போகவேண்டியதாயிருக்கிறது. ஒவ்வொருவராய் பனைமரத்தில் நடந்து செல்வதால் அபாயத்திற்குள்ளாக்கப் படலாமென்பதில் ஐயமின்று. அங்ஙனமாதல் தவறி தண்ணீரில் விழுந்தவர்களின் கதி அதோகதிதான்! இதை ரெயில்வேக் கம்பெனிக்காரர்களும் தாலுகா போர்டார்களும் கவனித்து ரெயில்வே சாதனமுள்ள விடத்தில் போக்குவரத்திற்கு இவ்வளவு வசதிக்குறைவு மிருக்கலாமா என்பதை யுன்னித்தக்கது செய்யமிக்க வேண்டுகிறேன்.

சு. பு. மா. வெள்ளையநாடார்,
உச்சிப்புளி.

## நாடார் மகாஜனங்களுக்கு.

ஐயன்மீர்!

மதுரை டவுனில் வெங்கலக்கடைத் தெரு கூ. த. கூ. சந்தில் அமைந்திருக்கிற ஸ்ரீ காமாக்ஷி லாட்ஜ், விருதுநகர் எஸ். எஸ். கருப்பையா நாடாரவர்களால் நடைபெற்று வருகிறதென்பது எல்லோருமறிந்த விஷயம்.

1927 ஞு பிப்ரவரி மீ 12 உ மதுரை விக்டோரியா எட்வர்டு ஹாலில் நடைபெற்ற நமது சங்கம் விசேஷ அங்கத்தினர் கூட்டத்திற்கு விஜயஞ் செய்திருந்த கனவான்கள் யாவருக்கும் சங்கத்தின் பேரால் ஸ்ரீ காமாக்ஷி லாட்ஜில் பால், பாயசம், அப்பளமொடு முக்கனியுடன் படைத்த பதார்த்த வகைகளின் உருசியும், வேலைபாட்கள் பரிமாறிய பான்மையும், இடத்தின் சுத்தமும், செய்த உபசாரமும், போற்றவும் மதிக்கவும் தக்கதென்பது லாட்ஜிற்கு விஜயஞ் செய்து அன்னமருந்திய ஒவ்வொருவருக்கும்காண் சொல்லாமலே விளங்கும். மேற்கண்ட பதார்த்த வகைகளுடன் ஒவ்வொரு சுக்கிரவாரந்தோறும் நடைபெற்று வருகிறது.

ஆகையால் மதுரைக்கு விஜயஞ் செய்யும் எல்லா கனவான்களும் மேற்கண்ட ஸ்ரீ காமாக்ஷி லாட்ஜிக்கு விஜயம் செய்வது இவ்வகையான சௌகரியத்தை வற்படுத்திய இந்த லாட்ஜ் ஸ்தாபகருக்கு, வெளியூர் வாசிகளின் சௌகரியத்தை நாடியென் மேலும் வேண்டுவன செய்யத் தூண்டுதலாயிருக்குமென்பது எனதெண்ணம்.

ஏ. கே. ஆறுமுக நாடார்.

## கந்தசாமிபுரம் கிராமப்பஞ்சாயத்து சபை.

திருச்செந்தூர்தாலுகா, கந்தசாமிபுரம் கிராமத்தில சமீபமாய் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படும் பஞ்சாயத்து சபை கிராமஜனங்களின் அப்பிரீதிக்கான முறையில் இயற்றப்பெற்றிருக்கிறது. ஜனங்களின் நன்மையையே பெரிதும் நாடிவரும் வியாபார முயற்சிதார்கள் இவ்வகை சபையில் அங்கம் பெறுதது விந்தையே. இதனால் இச்சபை அதிரகவிபமாயே ஆக்கப் பெற்றிருக்கின்றதென்பது மிகையாகாது. இக்கிராமத்தைச் சார்ந்த சர்வத்து ஜனங்களின் அபிப்பிராயங்களைக் கலந்து அவர்களின் முழுச் சம்மதத்தின் பேரில் இயற்ற வேண்டிய கடமையை சனம் ஆர்க்கனைசரவர்கள் எவ்வளவுதூரம் நிறைவேற்றியிருக்கிறார்களென்று ஆராயுமிடத்து திடமானபதிலுங் கிட்டில. ஒப்புக்கொள்ளத்தகாத இச்சபைகுறித்து மேலதிகாரிகளுக்கு வேண்டியன செய்தும் பயனில்லை. சட்டசபை அங்கத்தினர்களாவது இது விஷயத்தை கவனிக்குமாறு வேண்டுகின்றேன்.

யோ. கோ. ப. கோ. நாடார்
அன்கம்பெனி.

# நாடார்களும், பிராமணர் அல்லாதாரும்.

நாடார்கள் என்றும் நாடார்களாயிருப்பது போலவே என்றும் பிராமணரல்லாதாராயுமிருந்து வந்திருக்கிறார்கள். திருநெல்வேலி மதுரை ஆகிய இரு ஜில்லாக்களிலும் நாடார்கள் பிராமணர்களாலும் பிராமணரல்லாதாராலும் சமமாகவே விரோதிக்கப்பட்டு சமயம் நேர்ந்தபோது கஷ்டத்திற்காளாக்கப்பட்டு வந்திருக்கின்றனர் என்பது சரித்திர பரம்பரை. இவ்வித நிலைமையில் நாடார்கள் யாரைப் பெரியரென்றும் யாரைச்சிறியரென்றும் நினைப்பார்கள்! ஆங்காங்கு நாடார்களல்லாதவர்கள் பெருந்த இடங்களில் சிறு தொகையினராய்க் குடியிருந்துவரும் நாடார்களுக்கு எதிர்பாராத சமயங்களில் பல தீங்கிழைத்து வருவதான சமாச்சாரங்கள் இன்னமும் நாம் கேள்விப்படாமலில்லை. இப்படிப்பட்டவர்கள் யார் என்று விசாரித்தால் அவர்கள் பிராமணரல்லாதார்கள் என்று தான் பெரும்பாலும் ருஜுவாகிறது. சென்ற சட்டசபையில் பிராமணரல்லாதார் தான் இந்து தேவஸ்தான மசோதாவில் எல்லாரும் சமஉரிமையுடன் ஆலயத்துள்பிரவேசிக்கவேண்டுமெனப் பொருள் படக்கூடிய விதமாய் விதியைத் திருத்தியமைக்க வொட்டாதபடி மெஜாரிட்டி வோட்டுப்பலத்தால் டிஷ விஷயமாய் பிரேரிக்கப்பட்ட திருத்தப்பிரேரணை ஒன்றைத் தோற்கடித்தனர் என்பது நமக்குத்தெரியும். ஆயினும் சென்ற எலெக்ஷனில் இவர்கள் அடைந்த தோல்வியும் கவர்ன்மெண்டில் இவர்களுக்கிருந்து வந்த உத்தியோகச் சலுகையும் போன பின் ஒருவாறு ஞானமடைந்து பிராமணரல்லாதாராயுள்ள சகல வகுப்பினரையும் ஒன்று சேர்த்து பிராமணரைத் தோற்கடித்து விடவேண்டுமெனப் பெரும்போர் துவக்கியிருப்பதில் நாடாரையும் படைத்துணைவராய்க் கொண்டிருப்பதை விரும்புகிறார்கள் என்று தோன்றுகிறது. ஆயினும் நவீன யுத்த சரித்திரங்களில் சுய லாபத்தை உத்தேசித்தே ஒரு கக்ஷியில் சேர்வதென்றேற் பட்டிருக்கிறது. அவ்விதமே நாடார்களும் தம் சுபலாபம் கருதி மேற்சொன்ன இரு கக்ஷியில் ஒன்றுடன் சேர்ந்து கொள்வது குற்றமாகாது. ஆனால் நாடார்கள் அடைய விரும்பும் லாபம்தான் என்ன? சுயராஜ்ய இயக்கம் உண்டான காலம் முதல் நாடார்கள் திருநெல்வேலியிலும் மதுரையிலும் இதர பிராமணரல்லாதார்களுடன் ஹிந்து ஆலயங்களுட்போய் சுவாமி தரிசனம் செய்யும் உரிமை தங்களுக்கும் கிடைக்க வேண்டுமென்று கோரி வந்திருக்கின்றனர். இது விஷயமாய் அப்படிப்பட்ட காலம் மிக சமீபத்திலிருக்கிறதென்றே நம்மவர்களுக்கு ஆசீர் கூறப்பட்டு வந்திருக்கிறது. இது விஷயமாய் வற்புறுத்தி விசாரித்தால் பிராமணரல்லாதார்களில் தங்களை உயர்தர ஹிந்துக்கள் என்று சொல்லிக் கொள்பவரே உங்களுடைய ஆலயப் பிரவேசத்துக்கிடையூறாயிருக்கின்றனர் என்று பிராமணர்களும், பிராமணர்களே இடையூறாயிருக்கிறார்களென்று பிராமணரல்லாத வகுப்பில் முக்கியமானவர்களும் சொல்லிக்காலம் கழித்து வருகின்றனர். இது விஷயமாய் நம்முன்னேயே பிரிவினை ஏற்பட்டு சிலர் பிராமணராலேயே நாம் ஈடேற முடியுமென்றும், வேறு சிலர் பிராமணரல்லாதாரோடு சேர்ந்து பிராமண அதிகாரத்தைக் குறைப்பதாலேயே நமது கோரிக்கை ஈடேறுமென்றும் முரண்பட்ட அபிப்பிராயபபட்டு இன்னதுதான் செய்வதென்ற திட்டமான லக்ஷியமின்றி ஒருகால் பிராமணரையும் மற்றொருகால் இதரரையும் துணைகொண்டலைபவர்போல் விளங்குகின்றனர். மதுரையில் பிராமணரல்லாதார் மகாநாடு மாஜி மந்திரி கனம் பாத்ரோ அவர்கள் தலைமையின் கீழ் கூடியதின் பின் நம்மவர்கள் அசாரங்காக்கிரசுக்கு வெகு தூரமானதும் நமக்குச் சமீபமானதுமான மதுரைத்திட்டத்தின் மேல வெகு நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இந்த நம்பிக்கையில் நாம் திருநெல்வேலி எலெக்ஷனில் பிராமணரை நம்பி ஏமாந்தது போல் மறுபடி ஓர் முறை பிராமணரல்லாதாரால் ஏமாற்றப்படாமலிருக்கும்படி டிஷ மதுரைத் தொண்டர்கள் பார்த்துக் கொள்வார்களா? அப்படியானால் வெகு துரிதமாய் அமுலுக்குக் கொண்டுவரப்படவேண்டுமென்று பிராமணரல்லாதாராலும், புனராலோசனைக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று பிராமணராலும் தொல்லைக்கிடமாய்நிற்கும் ஹிந்து தேவஸ்தான மசோதாவில் ஹிந்துக்கள் சென்னைராஜதானி முழுவதிலுமே ஒரே திட்டத்துக்குட்பட்ட நிபந்தனையின்படி ஆலயப்பிரவேசத்துக்குப் பாத்திரராயிருக்கும்படி திருத்தம் செய்து தமக் கறபட்டுள்ள செல்வாக்கைக் கொண்டு டிஷ விஷயமான பிரேரணையை ஆதரித்து சுயராஜ்யக் கக்ஷியிலுள்ள பிராமணர்களே இது விஷயமாய் எதிர்செய்து தோற்கடித்து விட்டார்கள் என்று நாடார்கள் பிரத்தியக்ஷமாய்த் தெரிந்துகொள்ளும்படியான சங்கற்பத்தை உண்டுபண்ணமுன் வருவார்களா? அப்படியானால் நாடார்கள் பிராமணர்களை நம்பியிருப்பதைவிட டிஷ விஷயமாய் தங்களுக்குழைக்க முற்பட்டு நிற்கும் பிராமணரல்லாதாரைத் துணை கொள்வல் போற்றத்தக்கதே யாகும்.

D. B. S.

(தொடரும்.)

# ஒற்றுமைத்தல்.

ஒற்றுமைத்தல் என்பது ஒன்று சேர்ந்து பிரயாசப்படுதல் என அர்த்தப்படும்

பாடசாலை மாணவர் [டக்ஆப்வார்] கயிறிழுப்புப்போர் செய்கையில நாம் இழுத்துவிடலாம் என்ற ஒரே மனதுடன் ஒன்று சேர்ந்து இழுப்பார்களேயாகில் பயனடையாமற் போவதில்லை. ஒருவர் விட்டும், ஒருவர் இழுத்தும் இவ்விதம் தம் தம் சுய இஷ்டம்போல் தம் மேனி வடுப்படாமல் செய்வார்களானால் சிறிதும் பயனடைவதில்லை. அவ்வண்ணமாகவே நம் குலம் முன்னேற்றமடைய வேண்டுமாயின் நாடார் குலத்தினராகிய நாமெல்லாரும், எக்காரியங்கள் எத்தொழில்கள் செய்தாலும் ஒன்றுபட்டு செய்ய வேண்டும். குலம் ஒன்றேயானாலும், சிலர் மத வித்தியாசத்தினிமித்தம் பின்னடைகின்றனர். இப்படிப் பின்னடைவதுதான் நம் குலம் முன்னேற்றமடைய தடைப்படுவதாகின்றது. இவ்விதம் யோசிப்பார்களேயாகில் நரியின் தந்திரத்தால் எருதுகள் ஒற்றுமையின்றிப் பிரிந்து சிங்கத்தின் வாயிலகப்பட்ட கதை போலாகும். "ஒற்றுமை யில்லாக் குடி ஒருமிக்கக் கெடும்" என்பது நீதிவாக்கியம். நமக்குக் கிடைத்திருக்கும் அருமையான நாட்களில் நாம் அசட்டை செய்து தம் தம் மதப்படி அல்லது தம் தம் சுய இஷ்டப்படி மற்றவர்களுக்கு நேரிடும் கஷ்டங்கள் நமக்கல்லவென்று இறுமாப்புடன் இருப்போமேயானால் நம குலம் முன்னேற்றமடைவது எப்படி? ஆகையால நாடார் இந்துக்களேயானாலும், நாடார் கிறிஸ்தவர்களேயானாலும் சிறிதும் மத வித்தியாசமின்றி ஒருவருக்கு நேரிடும் துன்பங்களைத் தமக்கே நேரிடுகிறதெனஎண்ணி ஒருவர் குறைகளை ஒருவர் நீக்கி, இவ்விதம் சகோதரத்வம் உடையவர்களாயிருப்போமேயானால் மலை போன்ற எவ்வித உபத்திரவம் ஒருவர்க்கு நேரிட்டபோதிலும் வெயிலைக் கண்ட பனிபோல் நீங்கி நம் குலம் செழித்து, நம மித்திரனும் வளர்ந்தோங்குவானென்பது "உள்ளங்கை நெல்லிக்கனிபோல" அறியலாம். "நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மன உருக்கமுள்ளவர்களும் இணக்கமுள்ளவர்களுமாயிருந்து .........ஆசீர்வதியுங்கள்,"

1 பேதுரு 3, 8, 9.

மேலும் "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படிக் கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். கலா 6, 2.

போது நலப்பிரியன்,

G. P. Y.


உலகம்போற்றும் உத்தமர்—

குணமலை—கருணைக்கடல்—கண் காணுந்தெய்வம்

காந்தியடிகளார்

தென்னாடு வருகிறார்.

கதர் உடுத்துங்கள்!

கைராட்டினம் சுற்றுங்கள்!!

க. பெ. சங்கரலிங்கம்


Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# அதிஷ்டம்! அதிஷ்டம்!! முந்துங்கள்!!!

அருப்புக்கோட்டை
"நாடார்குல மித்திரன்" க்ஷேம நிதி
தர்மப்பண்டு லாட்டரிச் சீட்டு.

மொத்தம் சீட்டுகள் 33000. சீட்டு 1-க்கு ரூ 1.

## முதல் பிரைஸ் ரூ 3000.

1927-வரு மே மீ 4 உ க்கு பிரபவ வரு
சித்திரை மீ 22 உ பிரைஸ் எடுக்கக்கூடும்.

### 1-வது பிரைஸ் ரூ 3000.

| | |
|---|---|
| 2-வது பிரைஸ் ரூ 1500 | 3-வது பிரைஸ் ரூ 1000 |
| 4-வது பிரைஸ் ரூ 500 | |
| 200 ரூ-ல் 2-க்கு ரூ 400 | 100 ரூ-ல் 5-க்குரூ 500 |
| 50 ரூ-ல் 20-க்கு ரூ 1000 | 20 ரூ-ல் 50-க்குரூ 1000 |
| 10 ரூ-ல் 100-க்குரூ 1000 | 5 ரூ-ல் 200 க்குரூ 1000 |
| 3 ரூ-ல் 600-க்கு ரூ 1800 | 2 ரூ-ல் 2400-க்குரூ 4800 |

ஆக பிரைஸ்கள் 3381-க்கு ரூ 17500
புக் 1500-க்குக் கமிஷன் ரூ 3000
குமஸ்தா சம்பளம், அச்சுக்கூலி, விசேஷக் கமிஷன் வகை யறாக்கள் ரூ 1800
தனிப் பிரைஸ் ரூ 1700
பண்டுக்கு ரூ 9000

ஆக ரூ 33000

குறித்த காலத்தில் பிரைஸ் எடுக்கக் கூடும்.

1-வது பிரைஸ் முதல் 6வதுபிரைஸ்வரைவிழுந்தபுள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் அந்தந்தச் சீட்டுவிற்றவர்களுக்குக் கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

சகல விதமான கடிதப் போக்குவரத்தும் சூ. ஆ. முத்து நாடார், "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர், அருப்புக்கோட்டை என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

இங்ஙனம்,
சூ. ஆ. முத்து நாடார்,
"நாடார் குல மித்திரன்" பத்திராதிபர்.
சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியர்,
உப பத்திராதிபர், அருப்புக்கோட்டை

## துண்டு துணுக்குகள்.

வட்டுவா என்னுமூரில் காதலர் இருவர் சமீபமாயுள்ள பாறை மறைவில் தனித்து சந்திப்பதாக ஏற்கெனவே ஏற்பாடு செய்துகொண்டபடிக்கு காதலி செல்லத்தயக்கமேற்பட்டதால் காதலன் பாறையில் கண்ணயர்ந்து தூங்கிவிட்டான். அருகிலுள்ள பாம்பொன்று வந்து அவன்மேல் தலைவைத்து சுகமாய் கிடந்தது. காதலிவந்தனள்; கவலையுற்றனள; கதறலாயினள்; கூவலாயினள். உடனே சுற்றத்தாரனைவரும் ஓர் நாயும் வந்து சமீபத்தில் நின்று ஆர்ப்பரிக்கவே நாகம் காதலனுக்கிடரின்றிப் பாகமாய் நகர்ந்து சென்றது. என்ன விந்தை! காதலர் இருவர்க்கும் கல்யாணமும் ஏற்பாடாயது.

அண்மையில் இரங்கூனில் பெரிய தோர் தனல்மூண்டு அரிசி ஆலையொன்று 10 லக்ஷம் ரூபாய் நஷ்டத்துடன் சேதமுற்றது.

தென்னுப்பிரிக்காவுக்குத் தூது சென்ற செலவு ஒரு லக்ஷத்திற்கதிகமாய் விட்டதாம். இந்திய விவசாயக் கமிஷனுக்கும் லக்ஷ லக்ஷமாய்த்தான் கொடுக்கப்படினும் போதவில்லையென்றுஞ் சொல்லப்படுகிறது.

கெனியாவில் 960 ஐரோப்பியக் குழந்தைகளின் பேரில் 32000 பவுனும் 2828 இந்தியக் குழந்தைகளின் பேரில் 20000 பவுனும் கல்விக்காகச் செலவிடப் படுகிறதாம்.

இலங்கைச் சட்டசபையில் சமீபத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பெற்றிருக்கிறது. அதாவது சட்டசபை அங்கத்தினர்களில் கொழும்பிலுள்ளவர்களுக்கு மாதம் ரூ 100-ம் படிகோவாவி விருப்பவர்களுக்கு ரூ 450-ம் திரிகோண மலையிலிருப்பவர்களுக்கு ரூ 400 ம் இதரர்களுக்கு ரூ 250 ம் சம்பளம் கொடுப்பதாகும்.

டேவிப் குமாரராய் என்பவர் இந்திய சங்கீதத்தை மேல் நாட்டிற் பரப்புதற்கு 17-2-27ல் கல்கத்தாவினின்றும் விசேஷ வழியனுப்புதலுடன் புறப்பட்டிருக்கிறார்.

சாமி சிரத்தானந்தரின் ஞாபகச்சின்னத்திற்கு இந்திய சட்டசபை அங்கத்தினர்களில் சிலர்களாக ரூ15000க்கு வாக்களித்திருக்கின்றனர்.

## ரூ100 முதல் ரூ1000

பிரதிமாதம் "அபூர்வ சம்பாத்ய முறைகள்" என்ற புதிய புத்தகத்தைப் படித்து முடித்ததும் சம்பாதிக்கத் தொடங்கலாம். அபூர்வ முறைகளும் விசேஷ சம்பாத்ய ரகஸ்யங்களும் அடங்கியுள்ளன. விலை அணா பனிரெண்டு, வி. பி. தபால்செலவு பிரத்தியேகம். வெளிநாட்டு நண்பர்கள் ஒரு ரூபாய் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஆர். சேஷன், எடிட்டர்,
ஸ்ரீரங்கம்.
திருச்சிராப்பள்ளி.

## தேவை.

அருப்புக்கோட்டை, நாடார் எலிமெண்டரி பாடசாலைக்கு தலைமை உபாத்தியாயர் பதவிக்கு, செக்கண்டரி கிரேடு அல்லது எலிமெண்ட்டரி ஹையர் கிரேடு ட்ரெயிண்டு சர்ட்டிபிக்கேட்டுள்ளவர் தேவை. சம்பளம் திறமைக்குத் தக்கபடி கொடுக்கப்படும். கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்:—

மானேஜர்,
நாடார் எலிமெண்ட்டரி பாடசாலை,
அருப்புக்கோட்டை.

## உடனே தேவை.

தமிழ்ஜில்லாக்களிலும், கொழும்பு, பினாங்கு, சிங்கப்பூர், பர்மா, இரங்கூன்முதலிய வெளி தேசங்களிலும் நமக்கு ஏஜெண்டுகள் தேவை. ஜேயமில்லாவிடில் பணம் வாபீஸ் என்ற கண்டிஷன் பேரில் நாம் விற்பனை செய்கிறோம். மற்ற விவரங்களுக்கு ஒரு அணா ஸ்டாம்பு வைத்து எழுதவும்:—

ஆர். சேஷன், எடிட்டர்
ஸ்ரீரங்கம்,
(திருச்சி.)

## "1000 தொழில் முறைகள்."

சலவைசோப், இங்கி, மெழுகுவர்த்தி, இரசியமை, சர்பத்து, செயற்கை தங்கம், கண்ணாடியை ஒட்டும் சொலுஷன், பெப்பர்மெண்டு, ரசம் பூசுதல், தங்கவிட், சிகரெட்டு, நீக்குச்சி, ரோமசம்ஹாரி, அத்தர், பற்பொடி, மயிர்கருக்குந் தைலம், வீரியவிர்த்தி மாத்திரை, தேள் விஷ சஞ்சீவி, அஞ்சனம் முதலிய 1000 அபூர்வ செய்முறைகள் அடங்கிய பெரிய புத்தகம் ரூ 4-0-0. வி. பி. வேறு. இதன் விபரப் புத்தகம் இனும்! ஏமாந்துபோகவேண்டாம். ஷை பெரிய புத்தகத்தின் முக்கிய முறைகளடங்கிய "200 தொழில் முறைகள்" என்னும் புத்தகம் 210 பக்கங்கள் உள்ளது ரூ 1-0-0 தான். சிலர் இந்தாறு போலிமுறைகளை ரூ 1½ 2 என்று விற்பதைப்பார்த்து ஏமாந்துபோக வேண்டாம். எமது கைத்தொழில் புத்தகங்களின் கேட்லாக் இனும்!

ஆர்ட்புக்ஸ் கம்பேனி,
13. திருச்சிராப்பள்ளி.

உங்கள் வீட்டில் எந்த சமயங்களிலும் செவிக்கு இனிமையான பல சங்கீதப் பாட்டுக் கச்சேரி இனி நடைபெறும்.
100 ரூபாய் பெறும்படியான பெரிய கிராமபோன் (Gramaphone) போலவே பாடக்கூடிய அளவில் செய்யப்பட்ட

## மினியேசர் கிராமபோன்.

ஜெர்மன் தேசத்தில் ஓர் தொழிற்சாலையில் மாத்திரம் தயாரிக்கப்பட்டது. லண்டன் நகர் வர்த்தகர்களுக்கும், குடும்பஸ்தர்க்கும் ஆயிரக் கணக்காய் செலவிடப்பட்டது. தற்சமயம் எங்களால் ஜெர்மன் தொழிற்சாலையிலிருந்தே தருவிக்கப்பட்டது. பாட்டுகளை சப்திக்கும் இயந்திரங்களுடன் பார்வைக்கு அழகாயும், பற்பல அதிசயங்களுடனும் பாட்டுகள் பாடக்கூடியது. சயிஸ் 6"-6"; பிளேட் 5½;" உயரம் 4" உள்ள கிராமபோன் பெட்டி 1-ம், பல தினுசு பாடும் டபிள் சயிட் ரிகார்டு 1-ம், ஊசிகள் பாக்கட் 1-ம்,



செட் 1-க்கு விலை ரூ 8—8—0. தனி டபிள் சயிட் ரிகார்டு (தட்டு) 1-க்கு ரூ 1. ஊசிகள் பாக்கட் 1-க்கு அணா 4. தபால் சார்ஜ் பிரத்தியேகம். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும். பாக்கிங் போஸ்டேஜ் ரூ 1—6—0.

விலாசம்:—
ஓவர்சீஸ் சுவிஸ் வாட்சு கம்பெனி,
மவுண்ட் ரோடு, மதராஸ்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection